# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 50/=

இதழ் - 21

04.06.2023





காசுப் பாய்ச்சல் கூற்று 10



சவால்களை சாதனையாக மாற்றுவது … 14



ஊருக்குப் பொருத்தமான கால்நடை வளர்ப்பு 20


## பழங்குடி பெண்களின் வாழ்வியல் போராட்டம்


தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர … 04

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
04.06.2023

# சுவிஸ் தொழில்நுட்ப மேலாண்மையில் இயக்கச்சியில் ஒரு பாரிய பண்ணை



**- ஜெகன் அருளையா -**



கமில்டன் ஆறுமுகம் மற்றும் லீக்க ஷ்றோடருடனான எனது சந்திப்பு தவறுதலாகவே நிகழ்ந்தது. ஒரு குறிக்கப்பட்ட வேலைத்திட்டமொன்றில் எங்கள் இருவருக்கும் ஆர்வம் இருக்கலாமெனக் கருதிய பொதுவான நண்பரொருவர் ஏற்பாடு செய்ததன்படி எனது அலுவலகத்தில் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. உண்மையில் நண்பர் கருதிய அவ்வேலைத்திட்ட விடயத்தில் எங்களுக்குள் எதுவித பொதுமையும் இருக்கவில்லை. ஆனாலும் அது ஓர் அதிர்ஷ்டவசமான தவறாக அமைந்துவிட்டது. இதன் மூலம் நான் இரண்டு அரிதான மனிதர்களைச் சந்தித்தேன் - சுவிட்சர்லாந்திலிருந்து நாடு திரும்பும் கமில்டனும், ஹொலண்டிலிருந்து வருகை தரும் லீக்கவும்- தமது நேரம், பணம், திறமை ஆகியவற்றை முதலிட்டு வடக்கில் வியாபாரமொன்றை ஆரம்பிக்கவென வந்திருந்தார்கள்.

போர் காரணமாக கமில்டன் தனது 14 வயதில் யாழ்ப்பாணத்தை விட்டுப் போகிறார். ஏற்கெனவே அகதிகள் அமைத்து வைத்திருந்த மன்னார்-ராமேஸ்வரம் கடல் பாதையே அவருடையதாகவும் அமைந்தது. 2009 இல் முடிவுற்ற, சுமார் 30 வருடப் போரின் மத்தியில் ஒரு பதின்ம வயதுப் பையனுக்கு சாதாரண பாதைகள் கிடைப்பது இலகுவாகவிருக்கவில்லை. ஒருபக்கம் இளைஞர்களை எதிரிகளாகப் பார்த்தது மற்றப்பக்கம் அவர்களைப் போராளிகளாக்கப் பார்த்தது. இந்தியாவை நோக்கிப் பயணிக்கும் அயலவர்களோடு தனது இளைய மகனான கமில்டனையும் சேர்த்து மன்னார் துறைக்கு அனுப்பிவிடுகிறார் அவரது அம்மா. இளையவர்களை வீட்டில் வைத்திருப்பதைவிட சிறிய படகுகளிலேனும் கடலுக்குள் தள்ளிவிடுவதைப் பாதுகாப்பெனத் தாய்மார் கருதிய காலமது. எஞ்சிய அம்மாவும் ஒரு வயது மகளும் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனவோ அல்லது ஆயுதப் போராளிகளாவதற்கான தகுதிகளோ இல்லாத காரணத்தால் வழமையான பாதைமூலம் பஸ் வண்டியில் கொழும்பு விமானநிலையத்துக்குச் சென்றார்கள்.

தந்தையார் ஏற்கெனவே நாட்டைவிட்டு ஓடி சுவிட்சர்லாந்தில் தஞ்சமடைந்தவர். அவரது அழைப்பின்பேரில் கமில்டன் அவரது தாயாருடனும் சகோதரியுடனும் சென்று சுவிட்சர்லாந்தின் தலைநகர் பேர்ணில் தந்தையோடு இணைந்து கொண்டார். நான்கு வருட தொழிற் கல்வியுடன் கமில்டனின் கல்விப்பயணம் தொடர்ந்து இளமாணிப் பட்டத்தில் முடிந்தது. கல்வி முடிந்த கையோடு அவர் பல தொழில்களை ஆரம்பிக்கிறார். சிகை அலங்காரம், தோட்டி வேலை, புகைப்படக் கடை எனப்பல கடந்து இறுதியில் பிறநாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதில் வந்து நின்றது. இலங்கை அந்நாடுகளின் பட்டியலில் இருக்கவில்லை.

வடக்கின் பொருளாதாரத்துக்கு ஏதாவது செய்யவேண்டுமென்பதே கமில்டனின் ஆசை. ஐரோப்பாவில் நிறுவனமொன்றை வெற்றிகரமாக நிர்வகித்து போதுமான பணத்தை ஈட்டி வைத்திருப்பவர். அவர் விரும்பினால் உலகின் செல்வம் கொழிக்கும் நகரங்களில் நிரம்பி வழியும் சந்தைகளைத் துலாவிக்கொண்டு, செறிந்த வாசம் தரும் உயர்தரக் காப்பியை அருந்திக்கொண்டு, வேகமான விலையுயர்ந்த வாகனங்களில் தெருக்களைக் கிழித்துக்கொண்டு, திரையரங்குகளில் காலத்தைக் கழித்திருக்கலாம். கமில்டனும்

> டிசம்பர் 2022 வரை, 14 மாதங்களுக்கு கமில்டனும் லீக்கவும் பண்ணையிலேயே தங்கிப் பணியாற்றினர். தற்போது பண்ணையின் உருவாக்கம் நிறைவுபெற்ற நிலையில் 34 பேருக்கு நிரந்தர வேலை வழங்கப்படுகிறது. இன்னும் இரண்டு வருடங்களில் இப்பண்ணை கணிசமான வருமானத்தைத் தேடித்தரும். இன்னும் 5 வருடங்களில் தென்னைகள் பலன் தர ஆரம்பிக்கும்.



லீக்கவும் வாழ்வின் உன்னதங்களை அனுபவிப்பவர்கள்தான். அதே வேளை கிளிநொச்சியின், யாழ்ப்பாணத்தின், வடக்கின் மிக எளிமையான வாழ்வையும் சில வாரங்கள், மாதங்கள் அனுபவிக்கத் தயாராகவிருக்கிறார்கள்.

"நாங்கள் வடக்கிற்கு வந்தபோது கண்டது தேக்கமடைந்த நிலங்களையும் மனமொடுங்கிய மனிதர்களையுமே. எதுவுமே நடப்பதாகத் தெரியவில்லை. ஒருநாள் மறுநாளைவிட நல்லது எனக் கூறமுடியாது. தொழிற்சாலைகள் ஸ்தம்பித்துப்போயிருந்தன. உதவிப்பணத்தில் விவசாயம், முனைப்பு என்பது அரியதொரு சங்கதி. வாழ்வதை விடவும் தினம் தினம் மக்கள் வேறெல்லாமோ செய்துகொண்டிருந்தார்கள்" என்கிறார் கமில்டன்.

### நிலமொன்றைத் தேடி..

2018 இல் பாவனையற்ற நிலங்களுக்குப் பஞ்சமே இருக்கவில்லை. நகரங்களிலும், தேவைக்கதிகமான அளவில் கிராமங்களிலும் இப்போதும்கூட பெருந்தொகையான நிலங்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும் அவற்றை சட்டபூர்வமாக வாங்குவதென்பது இப்போதும் மிகக் கடினமான ஒன்றே. நிலத்தை உடைமையாக்குவதற்குமுன் அவற்றில் முதலீடு செய்வதில் பிரயோசனமில்லை. ஒருநாள் அவற்றை உண்மையான சொந்தக்காரனோ அல்லது போலியான சொந்தக்காரனோ பறித்துவிடலாம். சிலவேளைகளில் குண்டர்களைக் கொண்டு காணிகளிலிருந்து உதைத்து விரட்டப்படலாம். அல்லது பல வருடங்களாக நீதிமன்றங்களில் ஏறி இறங்கவேண்டியும் ஏற்படலாம். பல நிலச் சொந்தக்காரர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்கள்.

பெரும்பாலானவை, நிலம் பற்றி எதுவுமே தெரியாத, அக்கறையில்லாத உரிமையாளரின் வாரிசுக்களுக்கு தாரை வார்க்கப்படுகின்றன. இந்நிலங்கள் போரினால் சிதைக்கப்பட்ட பொருளாதாரக் கழிதரையெனத் தவறாகப் பார்க்கப்படுகின்றன. திரும்பி வரும் எண்ணமற்றவர்களால் நிலங்கள் மிக மலிவாக விற்கப்படுகின்றன. சிலரால் முற்றாகக் கைவிடப்பட்ட காணிகள் காடுகளாகிக்கொண்டிருக்கின்றன. பலரது உறுதிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறதெனக் கருதப்படும்



கச்சேரிகளில் காணாமலோ அல்லது அழிக்கப்பட்டோ விட்டன. எனது பாட்டியின் பழைய உறுதியைத் தேடியபோது அது பலவருடங்களுக்கு முன்னரே வெள்ளத்தினால் நாசமாக்கப்பட்டுவிட்டதெனக் கச்சேரி அலுவலர் கூறினர். தமது வாழ்நிலங்களிலிருந்து விரட்டப்பட்ட அகதிகள் சிலர் கைவிடப்பட்ட நிலங்களை ஆக்கிரமிக்கிறார்கள். அது அவர்களது தவறல்ல. பல 'கள்ள' உறுதிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆமை வேகத்தில் இயங்கும் இலங்கையின் நீதிபரிபாலனத்தோடு பல நில உரிமையாளர்கள் வருடக்கணக்காக மல்லுக்கட்டவேண்டியிருக்கிறது. பத்திரம் கிடைக்கத் தாமதமாகியதனாலோ அல்லது நீதிமன்றத்துக்கு ஒருவர் வரத்தவறிய காரணத்தினாலோ வழக்குகள் மீண்டும் மீண்டும் பின்போடப்படுகின்றன. சில வேளைகளில் ஒவ்வொரு தடவையும் மூன்று அல்லது ஆறு மாதங்களாலும் பின் போடப்படலாம். இதனால் உரிமையாளர்கள் நிலத்தைப் பயன்படுத்தவோ அல்லது வேறு யாருக்காவது விற்பதற்கோ முடியாமலிருக்கிறது. இதனால் நிலங்கள் தரிசுகளாகின்றன.

நிலமொன்றுக்காகத் தேடிக்கொண்டிருந்தபோது கமில்டன் பருத்தித்துறையைச் சேர்ந்த அவரது முன்னாள் ஆசிரியரைச் சந்திக்க நேரிட்டது. ஆனையிறவுக்கு அண்மையில் இருக்கும் இயக்கச்சியில் அவருக்கு 70 ஏக்கர்கள் இருந்தது மட்டுமல்லாது அதை விற்பதற்கும் அவர் முயன்றுகொண்டிருந்தார். அக்காணியின் அயலவரும் தனது 70 ஏக்கர் காணியை விற்பதற்கு முயன்றுகொண்டிருந்தார். ஆசிரியரும் அயலவரும் பல தசாப்தங்களாக இக்காணிகளின் உரிமையாளர்களாக இருந்தார்கள். உறுதிகளும் இருந்தன. 2019 இல் கமில்டன் மொத்த 140 ஏக்கர்களையும் வாங்கி எஸ்.கே. பண்ணைகள் (SK Farms) எனப் பெயரிட்டார். சிவஞானமூர்த்தி என்பது அவரது தந்தையின் பெயர். அவரது முதலெழுத்தையும் தனது பெயரின் முதலெழுத்தையும் கொண்டது இப்பண்ணையின் பெயர்.

### பண்ணை அபிவிருத்தி

2019 இல் கொவிட் முடக்கம் ஆரம்பித்தபோது கமில்டன் இந்நிலங்களை வாங்கினார். கொவிட் அவரை சுவிட்சர்லாந்தில் முடக்கிவிட்டிருந்தது. இயக்கச்சியில் இருந்த சிலருக்கு அவர் பணத்தையும் கூடவே செய்யவேண்டிய வேலைகள் பற்றிய கட்டளைகளையும் அனுப்பினார். அது பலனளிக்கவில்லை. பணம் கையாடப்பட்டது. கட்டளைகள் உதாசீனம் செய்யப்பட்டன. பொதுப்புத்தி பிரயோகிக்கப்படவில்லை. 10,000 தென்னைகள் நாற்றிடப்பட்டன. 2021 இல் கமில்டன் இயக்கச்சி வந்தபோது அவற்றில் 4,000 கன்றுகள் இறந்து போயிருந்தன. மீதி கைவிடப்பட்ட நிலையில் இருந்தன.

ஆகஸ்ட் 2021 இல் கமில்டன் நாடு திரும்பியிருந்தார். இரண்டு மாதங்களின் பின்னர் அக்டோபர் முடிவில் லீக்க அவரோடு இணைந்துகொண்டார். புதிய குழுவொன்றுடன் கமில்டனும் லீக்கவும் நிலத்தில் உழைத்தார்கள். ஆரம்பத்திலிருந்தே தென்னை சாகுபடி வாரியம் மற்றும் உள்ளூர் அனுபவஸ்தர்கள் போன்றோரின் ஆலோசனைகளைப் பெற்றுப் பணியாற்றினார்கள். நெதர்லாந்து தூதரகத்திடமிருந்து எதிர்பாராமல் உதவியும் கிடைத்தது. லீக்க ஒரு டச்சு நாட்டுக்காரவர் என்பதனால் இது சாத்தியமானது. தூதரகம் நிஷான் என்பவரை விவசாய ஆலோசகராக நியமித்தது. நிசானின் அறிவும், திறமையும், அவரது தொடர்புகளும் மிகவும் உதவியாக இருந்தன என கமில்டன் கூறுகிறார். நிஷானின் ஆலோசனையுடன் எஸ்.கே.

(06ஆம் பக்கம் பார்க்க)

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

# உணவுப் பாதுகாப்பு

பொருளாதாரப் பிரச்சினையுடன் உருவான உணவுப் பாதுகாப்பின்மை, இலங்கையில் பெருமளவுக்கு முன்னேற்ற மடைந்திருக்கின்றபோதிலும், வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் இந்தப் பிரச்சினை மோசமான கட்டத்திலேயே இருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. ஐ.நா. அமைப்புக்கள் கூட்டாக வெளியிட்டுள்ள இது குறித்த அறிக்கையை ஓர் எச்சரிக்கையாகக் கருதி விரைந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது என்பதை அரசாங்கமும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களும் உணர்ந்து செயற்படுவது அவசியம்.

2023 பெப்ரவரி, மார்ச் மாதங்களில் முன்னெடுக்கப்பட்ட உணவு பயிர் பாதுகாப்பு மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்த விடயம் வெளிப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. நாட்டில் தற்போது 39 இலட்சம் மக்கள் (17 வீதமானவர்கள்) மிதமான – மோசமான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டுள்ளனர். இது, கடந்த வருடம் ஜூன், ஜூலை மாதங்களில் 40 வீதமாகக் காணப்பட்டது. அப்போது, 60 ஆயிரம் மக்கள் மிகவும் மோசமான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டிருந்தனர். தற்போது அது 10 ஆயிரமாகக் குறைவடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இது வரவேற்கத்தக்க ஒரு முன்னேற்றம்தான்.

பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும் தேசிய ரீதியாக ஏற்பட்டிருக்கும் இந்த முன்னேற்றம் முக்கியமானது. உணவு நுகர்வில் ஏற்பட்ட முன்னேற்றமே உணவுப் பாதுகாப்பில் ஏறபட்ட முன்னேற்றத்துக்குக் காரணம். இதே நேரம், உணவு விலைகள் குறைவடைந்தமை, அறுவடை காலத்தில் விவசாய சமூகத்தினர் மத்தியில் காணப்பட்ட முன்னேற்றம் என்பனவும் இதில் செல்வாக்கு செலுத்தின என்று ஐ. நாவின் அமைப்புகள் தெரிவித்துள்ளன. ஆரோக்கியமான ஒரு போக்கை இது வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை.

எனினும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உணவு பாதுகாப்பின்மை இன்னமும் உயர் மட்டத்திலேயே உள்ளது என்றும் ஐ. நா. அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியிலேயே அதிகளவு உணவுப் பாதுகாப்பின்மை காணப்படுகின்றது என்றும் அந்த அமைப்புகள் கூறியுள்ளன. அதாவது, தமிழ் மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில்தான் இந்த நிலைமை அதிகளவுக்குக் காணப்படுகின்றது. ஐ.நா. வெளியிட்டுள்ள இந்த அறிக்கை வெறுமனே கடந்து சென்றுவிடக்கூடியதொன்றல்ல. இதற்கான காரணங்கள் கண்டறியப்பட்டு, அதற்கான தீர்வுகள் முன்வைக்கப்படாவிட்டால், போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தையே நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## வடக்கில் கறுவாச் செய்கை

வடபகுதியில் கறுவாவை உற்பத்தி செய்யமுடியும் என்பதையும், அதன் மூலமாகக் கணிசமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் வெளிப்படுத்தி கடந்த வாரம் நீங்கள் வெளியிட்டிருந்த கட்டுரை மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. கறுவா உற்பத்தி தொடர்பில் வடக்கு, கிழக்கில் இதுவரை காலமும் போதிய கவனம் செலுத்தப்படாதிருந்த போதிலும், இப்போதாவது அவ்விடயத்தில் கவனம் செலுத்தப்படுவது முக்கியமானதாகும். வடக்கு, கிழக்கில் நிறைய வளங்கள் இருக்கின்றபோதிலும், அவை உரிய முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. அவை திட்டமிட்ட முறையில் பயன்படுத்தப்பட்டால், எமது இளைஞர்கள் உழைப்பதற்காக வெளிநாடுகளுக்கு ஓடத் தேவையில்லை என்பதைத்தான் தமிழர் பொருண்மியம் வெளியிடும் கட்டுரைகள் தொடர்ந்தும் உணர்த்திவருகின்றன.

**காஞ்சனா தம்பையா - சுதந்திரபுரம், முல்லைத்தீவு**

## மலையகப் பொருளாதாரம்

மலையகம் 200 என்ற தலைப்பில் பொருண்மியம் வார இதழ் கடந்த வாரம் வெளியிட்டிருந்த ஆசிரியர் தலையங்கம் எம்மை மிகவும் கவர்ந்தது. இலங்கையின் பொருளாதாரத்துக்கும் - நாடு அதிகளவுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருவதற்கும் அதிகளவுக்குப் பங்களிப்பை வழங்கிய மலையக மக்களின் நிலை தொடர்பாக தெளிவாக அதில் கூறியிருந்தீர்கள். நாட்டுக்காக உதிரத்தையும், வியர்வையையும் சிந்தி மலையக மண்ணை உரமாக்கிய அவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். கல்வி வேலைவாய்ப்பு போன்றவற்றில் அவர்களுக்கு சிறப்பு இடமளிக்கப்படுவது அவசியம். இவற்றை வலியுறுத்திய பொருண்மியம் வார இதழுக்கு நன்றிகள்.

**எம்.தர்மராஜ் - அட்டன்.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - --------------------------------------------------
**முகவரி** - --------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------
**சந்தாக் காலம்** - -------------------------------------------
**செலுத்திய தொகை** - --------------------------------------
**செலுத்திய திகதி** - ----------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவு ண்) தங்கத்தின் சந்தை விலை 1,49,000 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,62,500 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி -** டொலரின் பெறுமதி தொடர்ந்தும் குறைவடைந்து வருகின்றது. இலங்கையின் பொருளாதாரம் முன்னேற்றகரமான பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது என்பதைத்தானே இது பிரதிபலிக்கின்றது?

புஷ்பமலர் செல்வராஜா,
திருகோணமலை

**பதில் -** பொதுவாகப் பார்க்கும்போது அவ்வாறிருந்தாலும் உண்மை நிலை அவ்வாறில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைத்திருப்பது, உல்லாசப்பணிகள் வருகை, வெளிநாடுகளில் புலம்பெயர்ந்தவர்கள், தொழில் பார்ப்பவர்கள் அதிகளவு பணத்தை அனுப்புவது, பிணைமுறிச் சந்தையின் வருகை, இறக்குமதிகள் குறைவடைந்திருப்பது என்பன டொலரின் பெறுமதி குறைந்தமைக்கு காரணங்களாக இருக்கலாம்.

ஆனால், இந்த நிலைமை தொடருமா என்பது கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றது. அரசாங்கத்தின் தளம்பலான பொருளாதாரக் கொள்கை இந்த நிலைமைகளைில் ஆட்டத்தைக் காணச் செய்யலாம். ஆயிரம் வரையிலான பொருட்களின் இறக்குமதிக்கான தடையைக் கடந்த வாரம் அரசாங்கம் நீக்கியிருக்கின்றது. இப்போது, வர்த்தகர்கள் போட்டி போட்டுக்கொண்டு அவற்றை இறக்குமதி செய்யப்போகின்றார்கள்.

ஜூன் மாத தொடக்கத்தில் பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கடந்த வாரம் தெரிவித்தார். இந்நிலையில், இந்த காலாண்டில் ஒரு டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 280 முதல் 320 வரை வர்த்தகம் செய்யப்படலாம் என்றும் ஆண்டின் இரண்டாம் பாதியில் டொலரின் பெறுமதி உயரும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்வுகூறுகின்றார்கள்.

அரசாங்கம் உறுதியான ஒரு பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்காத நிலையில் இவ்வாறான தளம்பல் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

**கேள்வி -** கடனட்டை பாவனை பெருமளவுக்கு குறைவடைந்திருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது. காரணம் என்ன?

பீ.பன்னீர்ச்செல்வம்,
கொட்டாஞ்சேனை.

**பதில் -** பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து கடனட்டைகளைப் பயன்படுத்துபவர்களிடம் 36 - 37 வீதம் வரையில் வட்டி அறவிடப்படுகின்றது. வருமானம் குறைந்து - செலவீனங்கள் அதிகரித்துள்ள ஒரு பின்னணியில் இந்தளவுக்கு அதிகளவு வட்டியைக் கொடுக்க முடியாத நிலையில் பாவனையாளர்கள் இருப்பதுதான் இதற்கு பிரதான காரணம்.

பெரும்பாலானவர்கள் அவசரத்துக்கு என கடனட்டையைப் பயன்படுத்திவிட்டு அதற்கு வட்டியையும், வட்டிக்கு வட்டியையும் கட்டி களைத்துவிட்டார்கள் என்பதன் வெளிப்பாடுதான் இது. பொருளாதார ரீதியில் எமது மக்கள் விழிப்படைந்துவிட்டார்கள் என்றும் இதனைக் கருதலாம்.

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 450/= |
| பச்சைமிளகாய் | - 260/= |
| தக்காளி | - 320/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 180/= |
| கோவா | - 400/= |
| கரட் | - 260/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 160/= |
| வாழைக்காய் | - 120/= |
| சின்ன வெங்காயம் | - 350/= |
| பெரிய வெங்காயம் | - 140/= |
| பாகற்காய் | - 450/= |
| வெண்டக்காய் | - 200/= |
| கருணைக்கிழங்கு | - 120/= |
| பயற்றங்காய் | - 400/= |
| லீக்ஸ் | - 360/= |
| பீற்றூட் | - 350/= |
| கறிமிளகாய் | - 350/= |
| முருங்கைக்காய் | - 1000/= |
| போஞ்சி | - 550/= |
| கத்தரி - தம்புள்ள | - 450/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 183/= |
| கனடா டொலர் - | 208/= |
| சீன யுவான் - | 39/= |
| யுரோ - | 302/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 208/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 352/= |
| சுவிஸ் பிராங் - | 309/= |
| அமெரிக்க டொலர் - | 283/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 194/= |
| கனடா டொலர் - | 220/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 319/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர் டொலர் | 221/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 370/= |
| சுவிஸ் பிராங் - | 329/= |
| அமெரிக்க டொலர் - | 397/= |

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஃபார்ம்ஸ் தென்னைகளோடு மட்டும் நில்லாது இதர சாகுபடிகளையும் கால் நடைகளையும் கூடவே வளர்த்தது. ஆடு, கோழி, கெண்டை (திலாப்பியா) மீன் ஆகியவற்றுடன் ஆரம்பித்த எஸ்.கே.ஃ பார்ம்ஸ் இப்போது வாத்து, பன்றிகளை யும் வளர்ப்பதற்குத் திட்டமிடுகிறது. சுவிட் சர்லாந்து விவசாயத்தின் மேலாண்மை வழங்கிய துல்லியத்தின் உதவிகொண்டு தமது கால்நடைகளுக்குத் தேவையான சரியான புல்வகைகளை அவர்கள் பயி ரிடுகிறார்கள். ஒவ்வொரு தனித்தனி தென்னையையும் அடையாளமிடுவது முதல் முழுப் பண்ணையையுமே வரை படக்குறியீட்டுடன் நேர்த்தியாக வடிமைத் துள்ளனர்.

ஏப்ரல் 2022 இல் கமில்டன் தனது பால்ய பள்ளி நண்பர் ஒருவரை முக நூல் மூலம் சந்தித்தார். வசீகரன் என்ற அவரை எனக்கும் சில வருடங்களாகத் தெரியும். கமில்டன் தனது 14 வயதில் படகில் தப்பியோடும் வரை வசீ அவரது நண்பனாக இருந்தவர். பின்னர் 32 வருடங்களாகத் தொடர்பற்றுப் போய் விட்டது. யாழ் நகரிலிருந்து சில கி.மீ. தொலைவில் 'மார்கோசா கிரீன் ஹொட் டேல்' என்னும் ஒரு மரபுரீதியான உண வகமொன்றை வசீ நடத்திவருகிறார். யாழ்ப்பாணத்தின் சூழல் செயற்பாட்டாளர் சமூகத்தில் முன்னணிப் பங்கு வகிப்பவர். உள்ளூரிலும் புகலிடத் தமிழர்களுடனும் மிகுந்த தொடர்புகளைப் பேணி வருபவர்.

நிஷான், வசீ போன்றோரின் ஆலோ சனைகளுடன் கமில்டனும் லீக்கவும் துரித முன்னேற்றத்தைக் கண்டனர். எஸ்.கே.ஃ பார்ம்ஸ் அபிவிருத்தியின்போது சுமார் 74 பேருக்குப் பணிவழங்கப்பட்டது. டிசம்பர் 2022 வரை, 14 மாதங்களுக்கு கமில்ட னும் லீக்கவும் பண்ணையிலேயே தங் கிப் பணியாற்றினர். தற்போது பண்ணை யின் உருவாக்கம் நிறைவுபெற்ற நிலை யில் 34 பேருக்கு நிரந்தர வேலை வழங்கப்படுகிறது. இன்னும் இரண்டு வருடங்களில் இப்பண்ணை கணிசமான வருமானத்தைத் தேடித்தரும். இன்னும் 5 வருடங்களில் தென்னைகள் பலன் தர ஆரம்பிக்கும். ஆட்டுக் கொட்டில்கள் செயற் படத் தயாராகிவிட்டன. கெண்டை மீன் வளர்ப்பு, பன்றிகள், வாத்துகள் வளர்ப் புக்காகக் குளமொன்று தயாராகிக்கொண் டிருந்தது. பண்ணை செயற்படுவதற்குத் தேவையான நாளாந்த நடவடிக்கைகள் நிரற்படுத்தப்பட்டாகிவிட்டது. கமில்டனும் லீக்கவும் தமது அடுத்த தொழில்முயற்சிக ளில் கவனம் செலுத்த இது வசதியாகவிருந் தது.

இப்பண்ணையின் உருவாக்கத்திற் கான செலவை ஆரம்பத்திலிருந்து கமில்டனின் ஐரோப்பிய நிறுவனங்களே



பொறுப்பேற்று வருகின்றன. 140 ஏக்கர் கள் காணியை அபிவிருத்தி செய்வதென் பது மிகவும் செலவைத் தரும் காரியம். கட்டிடங்கள், உட்கட்டுமானங்களை விட்டு உழவு இயந்திரங்கள், பவுசர்கள், JCB மற்றும் இதர இயந்திரங்களை இறக்குமதி செய்ய பல இலட்சம் டாலர்கள் செலவு செய்யப்பட்டன. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்களை கமில்டன் தனது பண் ணையில் பாவித்துப் பார்த்தார். அவை அடிக்கடி பழுதுபடுவதால் இரண்டு மாத வேலைத்திட்டங்களை நிறைவேற்ற ஆறு மாதங்கள் எடுத்தன. இறக்குமதி செய்யப் பட்ட இயந்திரங்களை இயக்குவதில் அவ ரது பணியாளர்கள் பெருமிதம் கொள்கின் றனர். அவற்றில் சுவிஸ் இயந்திரங்கள் குளிரூட்டப்பட்டவை. இதன் மூலம் அவர் கள் தமது தொழில் திறன்களை அதி கரிப்பதுடன் சுய கௌரவத்தையும் விருத்தி செய்துகொள்ள முடிகிறது. அவர்கள் தாம் வெறும் கூலி வேலைக்காரர்கள் அல்ல தொழில் வல்லுனர்கள் என்ற நினைப்பை கொள்வதற்கு இது வழிவகுக்கின்றது. இதனால் நிறுவனத்துடனான பணி யாளர்களது விசுவாசமும் அதிகரிக்கிறது.

அனுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு அனு பவம் மிக்க பொறியியலாளர் ஒருவர் இவ் வியந்திரங்களைப் பராமரித்து வருகிறார். இறக்குமதி செய்யப்பட்ட இவ்வியந்திரங் களை உள்ளூர்த் தேவைகளுக்காக வாடகைக்கு விடுவதன்மூலம் நல்ல வருமானத்தை ஈட்ட முடிகிறது. முழுப் பண்ணையினதும் நாளாந்த செலவை இவ்வருமானம் ஈடுசெய்கிறது. நம்பிக் கையான இவ்வியந்திரங்களை அதிக வாடகைக்குப் பெற்றுக்கொண்டாலும் அவை உடைந்து செயற்படாமல் விடுவத னால் பணியாளர் நேர விரயம், பணிச் சுணக்கம் ஆகியவற்றினால் ஏற்படும் நட் டத்தைவிட இது மேலானது என்ற நம்பிக்கை உள்ளூர் மக்களிடம் ஏற்பட்டுவிட்டது.

(09ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுச் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேர, பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.
தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்பு தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினை கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு கணக்கு உதவியாளர் (Account Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்கு பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.
தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்கு சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகன சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சி கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாண சுவையுடனான கோப்பிகள் 100g **Tin**களில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்து சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.
தொடர்புகளுக்கு 0766482303

---

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களை பெற்றுக்கொள்வதற்கு - 0777421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களை பெற்றுக் கொள்ள - 779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு
- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
| --- | --- |
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
| --- | --- |
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622
#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY





## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள அழையுங்கள். - 0772034807

-------------------------------------

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

-------------------------------------

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களை பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

-------------------------------------

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கி தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 075378053

-------------------------------------

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளை பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

-------------------------------------

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்வது எங்களை அழைக்கவும்
0766996628

-------------------------------------

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளது.
தொடர்புகளுக்கு - 077 6566508.

-------------------------------------

### காணி விற்பனைக்கு

மலையகத்தில் அப்புத்தளை நகரிற்கு அருகில் 20 பேர்ச் - 40 பேர்ச் காணிகள் விற்பனைக்கு. விடுமுறை வீடு, விடுமுறை விடுதி ஆகியவை அமைக்க ஏற்ற சூழல். மண்சரிவு மற்றும் வனவிலங்கு அபாயம் அற்ற பகுதி. பாதுகாப்பு, பராமரிப்பு, உரிய அனுமதிகள் என்பன ஏற்பாடு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 0777435557

-------------------------------------

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

-------------------------------------

### தேவை

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றி அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

-------------------------------------

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 773078799

-------------------------------------

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பவம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

-------------------------------------

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாக சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடரபுக்கு 0773024473

-------------------------------------

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்து தரப்படும்.
0775652282

-------------------------------------

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப் படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 773853765

-------------------------------------

### கல்வி

இம் முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழி பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

-------------------------------------

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம்கற்பிக்கப்படுகிறது. - 0772469113






(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது எஸ்.கே. ஃபார்ம்ஸ் கடற்கரையோடு இருக்கும் 30 ஏக்கர்கள் காணியைக் கொள்முதல் செய்ததுடன் அதில் 2,000 தென்னைகளைப் பயிரிடவும் ஆரம்பித்துவிட்டது. இப்பகுதியில் அசையும் பொருட்கள் களவுபோவது அதிகமாகையால் கால்நடைகள் இங்கு வளர்க்கப்படவில்லை.

## இறால் வளர்ப்பு

கடல் எல்லையில்லாத மேலும் 50 ஏக்கர் காணியையும் இப்பண்ணை வாங்கியுள்ளது. இதில் 40 X 1000 கன அடி குளமொன்றை அமைத்து அதில் இறால் வளர்ப்பதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென அமைக்கப்பட்ட வாய்க்கால்கள் மூலம் கடல்நீர் கொண்டுவரப்பட்டு விசேட சுத்திகரிப்பு நிலையங்களூடு சென்று மீண்டும் கடலை அடையும் வகையில் இக்குளம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு வருடமொன்றுக்கு 5,000 தொன்கள் வரை பிரபலமானதும், ஆரோக்கியதுமான வண்ணாமை இறால்களை உற்பத்திசெய்வதே கமில்டனின் நோக்கம்.

வடக்கில் ஆரம்பிக்கப்பட்டு இயங்காமல் கிடக்கும் தொழில்கள் ஏராளம். புதிய இயந்திரங்களுடன் இயங்காமல் இருக்கும் அரிசி ஆலைகள், பாவிக்கப்படாமலிருக்கும் தானம் செய்யப்பட்ட இயந்திரங்களுடன் தேங்காய் எண்ணெய் உற்பத்தி நிலையம் எனச் சில உதாரணங்கள். வெளிநாட்டு அரசாங்கமொன்றின் உதவியுடன் 2014 இல் ஆரம்பிக்கப்பட்டு 2017 இல் கைவிடப்பட்ட கெண்டை மீன் வளர்ப்புத் தொழிற்சாலையை வாங்கும் திட்டம் கமில்டனுக்கு உள்ளது. இவற்றைச் செயற்படுநிலைக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தமொன்றை எஸ்.கே. ஃபார்ம்ஸ் செய்துள்ளது. இதன் மூலம் உள்ளூர் மீன்வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதுடன் உள்ளூர் வாசிகளுக்கு வேலை வழங்குவதுடன் அவர்களது மீன் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். இங்குள்ள 25 மீன்வளர்ப்புத் தடாகங்களில் ஐந்தைக் கமில்டன் தனது சொந்தச் செலவில் புனருத்தாரணம் செய்கிறார். மீதியைப் புனருத்தாரணம் செய்ய இதர முதலீட்டாளர்களை அவர் எதிர்பார்க்கிறார்.




இவற்றோடு கூடவே விவசாயக் கழிவுகளை மீள்சுழற்சி செய்யும் நிறுவனமொன்றையும் உருவாக்க கமில்டன் முதலீட்டாளர்களின் உதவிகளை எதிர்பார்க்கிறார். அவரும் லீக்கவும் மேலும் தங்களை நலியவைக்க முடியாது. நல்ல தரங்களை நியமப்படுத்த தரமானதும் திறமையுள்ளதுமான பணியாளர்களை எடுக்கவேண்டுமென்பதில் அவர்கள் திடமாக உள்ளனர்.

வடக்கின் பொருளாதாரத்தை மீள் கட்டுமானம் செய்ய உயர்தர முகாமையாளர்களும் உசாரான பணியாளர்களும் தேவை. துணிச்சலான தொழில் வல்லுனர்களால் மட்டும் அது சாத்தியமாக முடியாது. கமில்டன், லீக்க, சுகந்தன் போன்றோர் - அவர்கள் IT அல்லது விவசாயம் அல்லது உற்பத்தித் துறைகள் எதுவாக இருந்தாலும் - சிறந்த முகாமையாளர்களையும் பணியாளர்களையும் உருவாக்குவதை ஊக்குவிக்க வேண்டும். சிறந்த முகாமையாளர்களும் பணியாளர்களும் தொழில்களை சிறப்பாக நடத்தும்போது முதலீட்டாளர்கள் வேறு வாய்ப்புக்களைத் தேடிப்போகவோ அல்லது விடுமுறைகளில் செல்வதிலோ கவனம் செலுத்தலாம். வீரர்கள் வேண்டுமானால் வெற்றிகரமான பொருளாதாரத்தை ஆரம்பிக்கலாம். ஆனால் அவை வளரவும் திளைக்கவும் தகைமையுள்ளதும் அர்ப்பணிப்புள்ளதுமான பணியாளர்களே தேவை.

தமிழாக்கம்: சிவதாசன்

https://marumoli.com



**காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்று இரண்டும் ஒரு நிறுவனத்திற்குள் நிதியின் இயக்கத்தைப் பகுப்பாய்வு செய்யக் கணக்கியலில் பயன்படுத்தப்படும் நிதி அறிக்கைகள் ஆகும். அவை ஒரே நோக்கத்திற்காகச் சேவை செய்யும்போது, இரண்டிற்கும் இடையே சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன.**

# காசுப்பாய்ச்சல் கூற்று



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

காசுப்பாய்ச்சல் கூற்று (பணப்புழக்க அறிக்கை) என்பது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஒரு நிறுவனத்தின் பண வரவுகள் மற்றும் வெளியேற்றங்கள் பற்றிய தகவல்களை வழங்கும் நிதிநிலை அறிக்கையாகும். இது நிறுவனத்தின் செயற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதி நடவடிக்கைகள் மூலம் உருவாக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படும் பணத்தைக் கண்காணிக்கின்றது.

காசுப்பாய்ச்சல் கூற்று மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

இயக்கச் செயற்பாடுகள்: இந்தப் பிரிவு நிறுவனத்தின் முதன்மை வணிகச் செயல்பாடுகளில் இருந்து வரும் பணப்புழக்கங்களை அறியத்தருகின்றது. பொருட்கள் அல்லது சேவைகளின் விற்பனையிலிருந்து பணவரவுகள், வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள், ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பிற இயக்கச் செலவுகள் ஆகியவை இதில் அடங்கும். நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளிலிருந்து பணத்தை உருவாக்கும் திறனை மதிப்பிடுவதற்கு இது உதவுகிறது.

முதலீட்டு நடவடிக்கைகள்: நீண்டகால சொத்துக்கள் அல்லது முதலீடுகளை வாங்குதல் அல்லது விற்றல் தொடர்பான பணப்புழக்கங்களை இந்தப் பிரிவு தெரிவிக்கிறது. சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களைக் கையகப்படுத்துதல் அல்லது விற்பனை செய்தல், சந்தைப்படுத்தக்கூடிய பத்திரங்களை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல் மற்றும் பிற நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்கள் ஆகியவற்றிலிருந்து பணப்புழக்கங்கள் இதில் அடங்கும். இது நிறுவனத்தின் முதலீட்டு முடிவுகளைப் பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது.

நிதி நடவடிக்கைகள்: இந்தப் பிரிவு மூலதனத்தைப் பெறுதல் அல்லது திருப்பிச் செலுத்துதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய பணப்புழக்கங்களைப் அறியத்தருகின்றது. நிறுவனத்தின் சொந்தப் பங்குகளை வழங்குதல் அல்லது திரும்ப வாங்குதல், கடன் வாங்குதல் அல்லது திருப்பிச் செலுத்துதல் மற்றும் பங்குலாபம் செலுத்துதல் ஆகியவற்றிலிருந்து பணப்புழக்கங்கள் இதில் அடங்கும். முதலீட்டாளர்கள் மற்றும் கடனாளர்களிடமிருந்து நிறுவனம் எவ்வாறு நிதி திரட்டுகிறது மற்றும் பயன்படுத்துகிறது என்பதை மதிப்பீடு செய்ய இது உதவுகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று ஒரு நிறுவனத்தின் பணப்புழக்கம், பண நிலை மற்றும் அதன் நிதிக் கடமைகளைச் சந்திக்கும் திறன் பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வழங்குகிறது. இது வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலை போன்ற பிற நிதி நிலை அறிக்கைகளை நிறைவு செய்கிறது. ஒரு நிறுவனத்தின் நிதி செயற்றிறன் மற்றும் ஆரோக்கியம் பற்றிய விரிவான பார்வையை வழங்குகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று இன்றியமையாததாகக் கருதப்படுவதற்கான சில காரணங்கள்:

பணப்புழக்க விபரத்தினை அறியத்தருகின்றது: ஊதியம், வாடகை மற்றும் பயன்பாட்டுக் கொடுப்பனவுகள் போன்ற தினசரி செயற்பாட்டுச் செலவுகளை ஈடுகட்ட போதுமான பணம் இருப்பதை நேர்மறையான பணப்புழக்கம் உறுதி செய்கிறது. ஒரு வணிகம் அல்லது தனிநபர் வெளிப்புற நிதியுதவியை பெரிதும் நம்பாமல் தங்கள் குறுகிய கால கடமைகளைச் சந்திக்க முடியும் என்பதை இது குறிக்கிறது.

நிதி ஸ்திரத்தன்மை எடுத்துக்காட்டுகின்றது: ஒரு நிறுவனம் அல்லது தனிநபருக்கு வெளியே செல்வதை விட அதிகப் பணம் வருகிறது என்பதை நிரூபிப்பதால் தொடர்ந்து நேர்மறையானப் பணப்புழக்கம் நிதி ஸ்திரத்தன்மையைக் குறிக்கிறது. இந்த ஸ்திரத்தன்மை சிறந்த திட்டமிடல், கடன் திருப்பிச் செலுத்துதல் மற்றும் வளர்ச்சிக்கான சாத்தியமான முதலீடுகளை அனுமதிக்கிறது.

கடன் மீள்கொடுப்பனவு விபரத்தினை பெற்றுக்கொள்ளலாம்: வட்டி மற்றும் அசல் கொடுப்பனவுகள் உட்பட கடன் கடமைகளை நிறைவேற்றுவதற்குக் காசுப்பாய்ச்சல் கூற்று இன்றியமையாதது. கடனளிப்பவர்களுக்கும் வழங்குனர்களுக்கும் இந்த நிதிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான திறனைத் தீர்மானிக்க ஒரு நிறுவனத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றினை அடிக்கடி மதிப்பீடு செய்கிறார்கள்.

முதலீட்டு வாய்ப்புகளினை வழங்குகிறது: நேர்மறையான பணப்புழக்கம், செயற்பாடுகளை விரிவுபடுத்துதல், புதிய தயாரிப்புகள் அல்லது சேவைகளை




உருவாக்குதல் அல்லது சொத்துக்களை வாங்குதல் போன்ற வளர்ச்சி வாய்ப்புகளில் முதலீடு செய்வதற்கான நெகிழ்வுத் தன்மையை வழங்குகிறது. உபரி பணத்தின் இருப்பு வணிகத்தில் மறு முதலீடு செய்ய அனுமதிக்கிறது, இது நீண்ட கால நிலைத் தன்மை மற்றும் போட்டித்தன்மையை வளர்க்கும்.

எதிர்பாராத நிகழ்வுகளினை திட்டமிடல்: காசுப்பாய்ச்சல் பகுப்பாய்வுப் பண உபரி அல்லது பற்றாக்குறையின் காலங்களைக் கண்டறிய உதவுகிறது. இந்த முறைகளைப் புரிந்துகொள்வதன் மூலம் வணிகங்களும் தனிநபர்களும் கடினமான காலங்களைக் கையாள்வதற்கும், அதிகப்படியான பணத்தைப் புத்திசாலித்தனமாக முதலீடு செய்வதற்கும், சிறந்தத் திட்டங்களை உருவாக்க முடியும். இத்தகைய திட்டமிடல் நிதி அபாயங்களைக் குறைக்கவும், சவாலான காலங்களில் தொடர்ந்து செயற்படுவதை உறுதிப்படுத்தவும் உதவும்.

மதிப்பீடு மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையினை அறியத்தருகின்றது: ஒரு வணிக அல்லது முதலீட்டு வாய்ப்பின் மதிப்பு மற்றும் கவர்ச்சியை மதிப்பிடுவதில் நேர்மறையான காசுப்பாய்ச்சல் கூற்று ஒரு முக்கிய காரணியாகும். இது ஒரு நிறுவனத்தின் நிலையான இலாபத்தை ஈட்டுவதற்கான சான்றை வழங்குகிறது. இது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கிறது மற்றும் அதிக மதிப்பீட்டு மடங்குகளை ஆதரிக்கிறது.

நேர்மறையான காசுப்பாய்ச்சல் கூற்று பொதுவாக விரும்பத்தக்கதாக இருந்தாலும் பணப்புழக்கத்தின் தரம் மற்றும் நிலைத்தன்மையும் கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பணவரவு மற்றும் வெளியேற்றங்களின் நேரம் பருவகாலத்தின் தாக்கம் மற்றும் பணி மூலதனத்தின் மேலாண்மை போன்ற காரணிகள் ஒரு நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதி ஆரோக்கியம் மற்றும் நிலைத்தன்மையைப் பாதிக்கலாம்.

நிதி ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும், வளர்ச்சியை ஆதரிப்பதற்கும், நீண்ட கால நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் பணப்புழக்கத்தைக் கண்காணிப்பதற்கும் மற்றும் திறம்பட நிர்வகிப்பதற்கும் மிக முக்கியமானதாகும்.

**காசுப்பாய்ச்சல் கூற்றிலிருந்து பயனடையும் சில முக்கியமானவர்கள்:**

முதலீட்டாளர்கள் மற்றும் பங்குதாரர்கள்: ஒரு நிறுவனத்தின் நிதி ஆரோக்கியத்தை மதிப்பிடுவதற்கு முதலீட்டாளர்கள் பணப்புழக்க அறிக்கையைப் பகுப்பாய்வு செய்கிறார்கள். பணம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ளவும், பங்குலாபங்களினை செலுத்துவதற்கான நிறுவனத்தின் திறனை மதிப்பிடவும், ஒட்டுமொத்த முதலீட்டுத் திறனை மதிப்பிடவும் இது அவர்களுக்கு உதவுகிறது.

கடன் வழங்குபவர்கள் மற்றும் (வியாபார) கடன் கொடுத்தவர்கள்: வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் பிற கடனளிப்பவர்கள் அதன் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான நிறுவனத்தின் திறனை மதிப்பிடுவதற்குப் பணப்புழக்க அறிக்கையை மதிப்பாய்வு செய்கிறார்கள். நிறுவனம் தனது கடமைகளைச் சந்திக்க போதுமான பணத்தை உருவாக்குவதையும் நிலையான பணப்புழக்க நிலையைக் கொண்டிருப்பதையும் அவர்கள் உறுதிப்படுத்த விரும்புகிறார்கள்.

மேலாண்மை மற்றும் நிர்வாகிகள்: நிறுவன மேலாண்மை மற்றும் நிர்வாகிகள் நிறுவனத்தின் பணப்புழக்கத்தைக் கண்காணிக்கவும் நிர்வகிக்கவும் பணப்புழக்க அறிக்கையைப் பயன்படுத்துகின்றனர். முதலீட்டு வாய்ப்புகள், நிதி முடிவுகள் மற்றும் பண மேலாண்மை உத்திகள் குறித்துத் தகவலறிந்த முடிவுகளை எடுக்க இது அவர்களுக்கு உதவுகிறது.

ஆய்வாளர்கள் மற்றும் நிதி வல்லுநர்கள்: நிதி ஆய்வாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் ஒரு நிறுவனத்தின் நிதி செயற்றிறன், பணப்புழக்கம் மற்றும் கடனை மதிப்பிடுவதற்கு பணப்புழக்க அறிக்கையைப் பயன்படுத்துகின்றனர். விகிதப் பகுப்பாய்வை மேற்கொள்ளவும், ஒரு தொழில்துறையில் உள்ள நிறுவனங்களை ஒப்பிட்டுப் பார்க்கவும், முதலீட்டுப் பரிந்துரைகளைச் செய்யவும் இந்தத் தகவலைப் பயன்படுத்துகின்றனர்.

ஒழுங்குமுறை அதிகாரிகள் மற்றும் அரசு நிறுவனங்கள்: ஒழுங்குமுறை இணக்கத்திற்காக நிறுவனங்கள் பணப்புழக்க அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கைகள் வெளிப்படைத் தன்மையை வழங்குவதோடு துல்லியமான நிதி அறிக்கையை உறுதிப்படுத்த உதவுகின்றன.

வணிக பங்காளிகள் மற்றும் வழங்குநர்கள்: வணிக கூட்டாளர்கள் மற்றும் வழங்குநர்கள் ஒரு நிறுவனத்தின் பணப்புழக்க அறிக்கையை மதிப்பாய்வு செய்யலாம். அதன் நிதி நிலைத்தன்மை மற்றும் பணம் செலுத்தும் கடமைகளைச் சந்திக்கும் திறனை மதிப்பிடலாம். இந்த தகவல் நிறுவனத்துடன் வணிகம் செய்வது தொடர்பான ஆபத்தை மதிப்பிட உதவுகிறது.

காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்று என்பவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகள்

காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்று இரண்டும் ஒரு நிறுவனத்திற்குள் நிதியின் இயக்கத்தைப் பகுப்பாய்வு செய்ய கணக்கியலில் பயன்படுத்தப்படும் நிதி அறிக்கைகள் ஆகும். அவை ஒரே நோக்கத்திற்காக சேவை செய்யும் போது, இரண்டிற்கும் இடையே சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன.

**1. வரைவிலக்கணம்:**

காசுப்பாய்ச்சல் கூற்று: குறிப்பிட்ட காலக்கட்டத்தில் ஒரு நிறுவனத்தின் பண வரவுகள் மற்றும் வெளியேற்றங்களை முன்வைக்கும் நிதிநிலை அறிக்கை. இயக்க நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதியளிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றிலிருந்து உருவாக்கப்படும் பணம் பற்றிய தகவலை இது வழங்குகிறது.

நிதிப்பாய்ச்சல் கூற்று: குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு நிறுவனத்தில் உள்ள நிதிகளின் ஆதாரங்கள் மற்றும் பயன்பாடுகளைக் காட்டும் நிதிநிலை அறிக்கை. இது செயற்பாட்டு மூலதனத்தில் ஏற்படும் மாற்றங்கள், நீண்ட கால நிதிகள் மற்றும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிதி நிலை பற்றிய தகவல்களை வழங்குகிறது.

**2. கவனம் செலுத்துகின்ற காரணி:**

காசுப்பாய்ச்சல் கூற்று: ஒரு நிறுவனத்தின் பண நகர்வுகளில் முதன்மைக் கவனம் செலுத்துகின்றது. குறிப்பிட்ட காலகட்டத்தில் நிறுவனத்தால் எவ்வாறு பணம் உருவாக்கப்படுகிறது மற்றும் பயன்படுத்தப்படுகிறது என்பதை இது பகுப்பாய்வு செய்கின்றது, பங்குதாரர்கள் நிறுவனத்தின் பணப்புழக்கம் மற்றும் பண நிர்வாகத்தை மதிப்பிட அனுமதிக்கிறது.

(23ஆம் பக்கம் பார்க்க)




# தையலர் தையல்



- தமிழ்க்கவி -

‘பூப்பூக்கும் மாசம் தைமாசம்’. தை மாதமானதும் பெண்களுடைய வேலைச் சுமை அதிகரிக்கும். அதுவரை களனிகளிலும் சேனைகளிலும் ஆண்களும் கூடமாட வேலை செய்தவர்களுக்கு தனிமையாக தாமே தமது எண்ணப்படி செய்யும் வேலைகளை இந்த மாதத்தின் பின் ஆரம்பிப்பார்கள். இந்த வேலைகளில் ஆண்களின் தலையீடு பெரும்பாலும் இருக்காது.

ஒவ்வொரு கிராமத்திலும் இலுப்பைப்பூ வாசம் வீசும். இலுப்பை மரங்களில் குண்டு குண்டான அழகிய வெண்ணிறப் பூக்கள் மரங்களின்கீழ்சொரியும். இலுப்பைப்பூவுக்கு ஒரு விடுகதை உண்டு. ‘ஆத ்தில போறவருக்கு பூத்தில ஓட்டை”. இலுப்பை மரங்கள் பெரும்பாலும் நீர்க்கரை களிலேயே நிற்பதால் அதன் பூவும் தண் ணீரில் மிதந்து செல்லும். மற்றப்படி காடு கரம்பைகளில் நிற்கும் இலுப்பைப் பூக்களை முதல் நாள் பகலில் மரத்தின் கீழ் துணிகளை விரித்து வைத்து காலையில் அதில் விழுந்து கிடக்கும் பூக்களைச் சேகரிப்பது பெண்கள்தான். இந்தப்பூக்களை வெய்யிலில் காயவைத்து வற்றலாக்கினால் முந்திரி வற்றல் போல (பிளம்ஸ்) இருக்கும். சுவையும் தோற்றமும். அப்படி சேகரித்த பூக்களை உரலில் இடித்து. நீரில் கரைத்து கொதிக்க வைத்து வடித்து எடுக்கப்படும் சாற்றை, மிதமான நெருப்பில் வற்றக்காய்ச்சி பாணியாக்குவார்கள். இது இலுப்பைப்பாணி. காமாலை, வயிற்றில் கட்டி, போன்ற இன்னும் அநேக நோய்களுக்கு இது மருந்தாகும். அதைவிட அன்றாட உணவில் இது சேர்கிறது . எப்படி “ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை” என்பது போலதான். அதிகமாக நாங்கள் ரொட்டி பாண், வெள்ளரிப்பழம், பிட்டு அப்பம் என்பவற்றுடன் சாப்பிடுவதும் இந்த பாணிதான். தேநீர் ஏது? ஓட்டு மொத்த மக்களும் பால்தான். அதைவிட்டால்பழஞ்சோற்றுக்கரைசல்தான்.

இலுப்பைப் பூக்களின் கதையை விட உலுவிந்தை, வீரப்பழம், பாலைப்பழம் என்பவையும் பாணியாகச் சேகரிக்கப்பட்டு வீடுகளில் இருக்கும். இதே தைமாதம் முடிய, மாசி பங்குனி தேன் சேகரிக்கும் காலமாகும். குறிப்பாக பங்குனி சித்திரை மாதங்களில் பசுக்கள் கன்று போடுவதும் அதிகம். பாலும் தேனும் பெருகி ஓடும் காலம் என்பது இதைத்தான். வைகாசி பிறந்தால் தேன் சேகரிப்பது நின்றுவிடும். எங்காவது ஒன்று குத்தியாக பொந்துகளில் தேன் கிடைத்தால்தான் உண்டு.

கால மாற்றங்களை விவசாயிகள்கணிப்பிடுவதில் வல்லவர்கள். ஒருதடவை ரக்ஷ்ய அதிபர் குருசேவ் விவசாயிகளுக்கான அறிவித்தலை தனது வானிலை ஆய்வு மையத்தின் அறிவுரைப்படி கொடுத்தாராம். ‘இன்னும் பத்து நாளில் மழை வருகிறது. விவசாயிகள் தரப்பட்ட விதைகளை பத்தங்குல ஆழத்தில் நிலத்தில் போட்டுவிடுங்கள்.’ மழை வருவதற்கும் அது முளைப்பதற்கும் சரியாக இருக்கும்’ என்று விவசாயிகள் அப்படியே செய்தார்கள். ஆனால் மழை குறித்தபடி வரவில்லை. அதிபர் சுமார் ஒரு மாதத்தின் பின் தனது விவசாய நிலங்களை

> கோடையில் செய்ய வேண்டிய உணவு பதனிடும் வேலைகளைப் பெண்கள் பக்குவமாக கையாளுவதால் மாரிகாலத்திலும் தன் மக்களையும் வீட்டிலுள்ளவர்களையும் பசியில்லாமல் காப்பாற்றுகிறாள். மேலும் மாரி காலத்தில் மட்டுமே கிடைக்கக் கூடிய அரிய உணவுப் பொருட்களையும் தவறாமல் உணவில் சேர்த்து விடுகிறார்கள்



பார்வையிட உலங்கு வானூர்தியில் பயணமானார். அவர் எல்லா நிலங்களும் தரிசாக கிடப்பதையே கண்டார். ஆனால் ஒரேயொரு விவசாயியின் நிலத்தில் மட்டும் பயிர் முளைத்திருந்தது. அவர் அந்த விவசாயியை அழைத்து காரணங் கேட்டார். அவன் சொன்னான். வானத்தில் வெள்ளிகளையும் காற்றையும் அவதானித்தேன். எனது கணிப்புப்படி மழை வர பதினைந்து நாட்களுக்கு மேலாகும் எனத் தெரிந்தது. எனவே நான் விதைகளை பத்தங்குலத்துக்குப் பதிலாகப் பன்னிரண்டு அங்குல ஆழத்தில் புதைத்தேன். அதனால் அவை கடும் வெப்பத்தில் புழுங்கிப் போகாமல் தப்பியிருந்தன. எனவே மழை வர அவை முளைத்தன என்றார்.

இதே வழமையைத்தான் பெண்களும் கையாளுவார்கள். கோடையில் செய்ய வேண்டிய உணவு பதனிடும் வேலைகளை அவர்கள் பக்குவமாக கையாளுவதால் மாரிகாலத்திலும் தன் மக்களையும் வீட்டிலுள்ளவர்களையும் பசியில்லாமல் காப்பாற்றுகிறார்கள். மேலும் மாரி காலத்தில் மட்டுமே கிடைக்கக் கூடிய அரிய உணவுப் பொருட்களையும் தவறாமல் உணவில் சேர்த்து விடுகிறார்கள். காளான் உற்பத்தி என்பது இப்போது நடக்கிறது. நாங்கள் மாரிகாலம் வந்தால் மேகம் முழங்கினால் காளான் வெடிக்கும் என்பதையும் அது எங்கெங்கே வெடிக்கும் என்பதையும் அறிந்து பயன்படுத்துவோம். இறைச்சிக் காளான் உட்புறம் ரோஸ் நிறமாகவும் கட்டையான கால்களை உடையதுமான காளான். அற்புதமான சுவை உடையது. மாரியில் குளங்களை அண்டிய கருநிலத்தில் வெடிக்கும். புற்றில் அல்லது மென்மையான வேலித்திடல்களில் முளைப்பது புத்துக்காளான் நீண்ட கால்களை உடையது.

எந்தக்காளானானாலும் அது வெடித்த சில மணி நேரத்திற்குள் பயன்படுத்த வேண்டும். இல்லையேல் புழுத்துப் போய்விடும். இதே போல சில கீரைவகைகள் மாரி காலத்தில் மட்டுமே கிடைக்கும். ஆரைக் கீரை பொன்னாங்கண்ணி, கானாந்தி என்பவை இதில் அடக்கம்.

வீடுகள் பெரும்பாலும் குடிசைகள்தான். ஒரு ஊரில் கல்வீடு என்பது ஒன்றிரண்டு தான் அதுவும் ஒரு பகுதியை மட்டுமே கல்லால் கட்டிவிட்டு மீதியை ஓலைக் குடிசையாகத்தான் வைத்திருப்பார்கள். இந்தக் குடில்களுக்கான கிடுகு வருடாந்த வேய்ச்சலுக்கானது. பெண்களால்தான் பின்னி சேகரிக்கப்படும். இதில் ஓலைகளை வெட்டிக் கிழித்துப் போட ஆண்கள் உதவுவார்கள். இதைவிட விவசாயத்தில் நெல் அறுவடைக்குப் பின் கிடைக்கும் வைக்கோல் வீடுகளில் போராக போடப்பட்டு நனையாமல்பாதுகாத்து அதை மாடுகளுக்கு தீனியாகவும் வீடு வேய்வதற்கும் பயன்படுத்துவோம். இப்போது வைக்கோல் எவருடைய வீட்டிலும் இல்லை. பாருங்கள் முன்னர் சீமெந்து வெற்றுப்பைகளை ஐந்து சதம் பத்துச்சதம் என்ற விலைகளில் வாங்கி பொருட் கொள்வனவுக்கு பயன் படுத்தினோம். இன்றும் சீமெந்து பெருமளவு பயன்பட்டாலும் அதன் பைகளை நடு வயிற்றில் வெட்டி சேதப்படுத்தி அழிக்கிறார்கள். இல்லையேல் பொலித்தீனை எப்படி விற்பது. நாம் இப்போது எம்மை கோப்ரேட் கம்பனிகளுக்கு அடகு வைத்திருக்கிறோம்.

உண்பதற்கு அடுத்தபடியாக உடுத்துவது தானே முன்னணியில் நிற்கிறது. உடுத்துகிற துணிகளை கடையில் வாங்கினாலும் அவற்றை உருப்படியாக தைத்துப் போடுவதும் பெண்கள்தான். வீட்டில் பிள்ளைகளுக்கான துணிகளைக் கிழிசல்களை தலையணை உறைகளை என உட்கார்ந்து தைத்து முடிப்பதும் பெண்கள்தான். பழந் துணிகளை மகாத்மாகாந்தி பயன்படுத்திய விதம் குறித்து நான் படித்த போது அதைவிட சிறப்பாக என் தாய் தைத்து போட்ட கவுணை பாவாடையாகவும், சேலையில் கரைந்து போகும் பகுதியை கழித்து விட்டு இழுத்து பொருத்துவதும் அதன்பின் அது தொட்டிலாவதும், அதற்கும் பின் எமது படுக்கை விரிப்பாகுவதையும், அதன்பன் அது நீரை வடிகட்டவும் தூசு படிந்த நவீன பொருட்களின் துடைப்பானாகவும், அப்பப்பா எத்தனை வகையில் பயன் படுத்துவார்கள். எந்தப் பொருளையும் அதன் இறுதிப்பாவனை வரை அனுபவித்தவர்கள் எமது பெண்கள். இப்போதுள்ள பெண்கள் ஒரு விழாவில் கட்டுகிற சேலையை அது எவ்வளவு விலையானாலும் அதன் பிறகு உடுத்துவதை தவிர்த்து வருவதை காண மனம் பதைக்கிறது. எவ்வளவு அறியாமையுடன் எமது வருமானத்தை அழித்து வருகிறோம். கஸ்டப்பட்டு உழைக்கிறோம். அதைப்பற்றி கவலையே இல்லாமல் செலவிடுகிறோம். சேமிப்பது என்பது மறைந்து கொண்டிருக்க அசம்பாவிதம் நேருகிற போது அலட்டிக் கொள்ளாமல் கடன் வாங்கி செலவழிக்கிறோம். இன்று ஏராளமான வீடுகள் பார்ப்பதற்கு ஆடம்பரமானதாக தெரிகின்றன. ஆனால் அதில் வாழ்பவர்களின் மனங்களில் கடன் என்ற இருள் மூடிக் கிடக்கிறது. வாழ்நாள் முழுவதும் மரஞ்செடிகளிலிருந்தோ இயற்கையிருந்தோ கிடைக்கும் சாதாரண பொருட்களையே சேகரித்து பதப்படுத்தி வாழ்ந்த ஒரு சமூகம் இன்று கடன் சுமையில் அல்லாடுகிறது வேடிக்கைதான்.

நேர்கண்டவர் - ஞா.கவினி




இலங்கையின் வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சியிலிருந்து மண்ணின் வாசனையோடு தரமான உற்பத்திகளை வழங்கி வரும் live green உற்பத்தியாளர் திருமதி சிவகுமார் சுகந்தி பாரம்பரியமான வடகம், மூலிகைத் தேநீர், அன்றாட தேவைக்கான உணவுப் பொருட்களோடு காளான் வளர்ப்பிலும் அசத்துகிறார்.

காளான் உற்பத்தியில் மாத்திரமன்றிக் காளானில் விதவிதமான உணவு வகைகளையும் தயாரிக்கத் தெரிந்த சுகந்தி, காளான் வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கு பயிற்சிகளையும் வழங்குகிறார். தன்னிடம் பயிற்சி பெறுபவர்களுக்கெல்லாம் காளான் வளர்ப்பை ஊக்கப்படுத்தும் இவர் அவர்களுடைய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்குமான சந்தர்ப்பத்தையும் வழங்குகிறார்.

# சவால்களை சாதனையாக மாற்றுவது எங்களுடைய கைகளிலேயே உள்ளது

> எங்களைப் போன்ற முயற்சியாளர்களுக்கு சவால்கள் என்பன பழக்கப்பட்ட விடயமாகப் போய் விட்டது. உண்மையிலேயே தனித்து ஒரு பெண் இயங்கும்போது அனேகம் சவால்களைச் சந்திக்க நேரிட்டாலும் எல்லாவற்றையும் முறியடித்து வெளியே வரும் பலத்தையும் இந்த தொழில் தான் நமக்குக் கொடுக்கிறது.

## live green நிறுவனர் சுகந்தி

தனது மூலப் பொருட்களை அயலில் உள்ள பெண்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு விரும்பும் சுகந்தி அவர்களுக்கான பயிற்சிகளை அளித்து அவர்களை உற்பத்தியாளர்களாக மாற்றுவதில் பெரும் அக்கறை கொண்டுள்ளார். இவருடைய இந்தத் திட்டத்தினூடுபலபெண்கள்நிரந்தரமான வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதோடு live green உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்கிறார் சுகந்தி.

### சந்தைவாய்ப்புக்கள்

ஆரம்பத்தில் சந்தைக்கான வாய்ப்புக்கள் கொஞ்சம் சிரமமாகத்தான் இருந்தன ஆனால் இப்போது மக்கள் எனது பொருட்களுக்கு பழக்கப்பட்டு விட்டார்கள். ஆனாலும் மூலிகை தேநீர், காளான் உற்பத்திகளை எமது நாட்டினரை விட வெளிநாட்டினரே மிகவும் விரும்பி கொள்வனவு செய்கின்றனர்.

எனது உற்பத்திகளை தற்போது வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தாலும் முறையான விதத்தில் நேரடியாக எனது உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு சந்தைபடுத்தவே விரும்புகிறேன். அதற்கான பதிவுகளை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட வேலைகளில் இருக்கிறோம். இது மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் வாழும் பல பெண்களுக்கு நல்ல வேலைவாய்ப்பை கொடுக்கக்கூடிய முறையில் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகிறேன்.

### சவால்கள்

எங்களைப் போன்ற முயற்சியாளர்களுக்கு சவால்கள் என்பன பழக்கப்பட்ட விடயமாக போய்விட்டது. உண்மையிலேயே தனித்து ஒரு பெண் இயங்கும்போது அனேகம் சவால்களை சந்திக்க நேரிட்டாலும் எல்லாவற்றையும் முறியடித்து வெளியே வரும் பலத்தையும் இந்தத் தொழில் தான் நமக்கு கொடுக்கிறது.

நமக்கே நமக்கென்று ஒரு சொந்தத் தொழில் கைகளில் இருக்கும் போது பல மடங்கு பலத்தையும் மனோ திடத்தையும் அது தருகிறது. தொழில் தொடங்கிய காலகட்டங்களில் பல சவால்களை நான் சந்தித்திருந்தாலும் தற்போது மிகவும் சாதாரணமாக எனது தொழிலை மேற்கொள்வதற்கு பழக்கப்பட்டு விட்டேன். தற்போது எனது






உற்பத்தியின் மூலம் 20க்கு மேற்பட்ட குடும்பங்கள் மறைமுகமான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்கின்றன. தரமான உற்பத்திகளை செய்வதற்கும் மிகத் தரமான பொதியிடலை மேற்கொள்வதற்குமாக நான் உழைத்த உழைப்புதான் இன்று என்னை வெளியிடத்தில் அறிமுகப்படுத்தி இருக்கிறது என்று நினைக்கிறேன்.

எல்லோருக்கும் சவால்கள் வரும். அவற்றை சாதனையாக மாற்றுவது எங்களுடைய கைகளில் தான் இருக்கிறது.

**கனவுகள்**

எனது கனவுகள் எப்போதும் பெரியவைதான். எனது உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதோடு



எனது சமூகமும் விரும்பி பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் அவை இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். நான் கற்றுக்கொண்ட உத்திகளை இன்னும் பல பெண்களுக்கு பயிற்றுவிப்பதன் ஊடாக ஒரு தனித்துவமான பெண்கள் சாம்ராஜ்யத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற பேரவா எனக்கு இருக்கிறது.

பெண்கள் எப்போதும் பிறரில் தங்கியிராத வாழ்க்கையை வாழ வேண்டும் என்று எண்ணுகிறேன். தனித்துவமான திறமைகளை தங்களுக்குள் ஒளித்து வைத்திருக்கும் பெண்களுக்கு நாங்கள் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். நாட்டின் பொருளாதார சிக்கல் நமது குடும்பத்தில் பிரதிபலிக்காத வண்ணம் அவர்களை காப்பாற்ற வேண்டியது நமது ஒவ்வொருவரதும் கடப்பாடு தானே.

ஆகவே தான் தற்சார்பு வாழ்க்கையை நான் பெரிதும் விரும்புகிறேன். இந்த நேரத்தில் என்னை சகல வழிகளிலும் ஊக்குவிக்கும் எனது நண்பர்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். தொழில் முனைவோராக திகழ்கின்ற பெரும்பாலான பெண்கள் சவால்களைச் சந்திப்பதற்கு துணிவு உடையவர்களாகவும் தொடர்ந்து பயணிக்கும் திறனுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். அந்தத் தைரியத்தை நமக்கு தருவது ஒரு சொந்தத் தொழில் தான் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். என்கிறார் live green நிறுவனர் சிவகுமார் சுகந்தி.



நாள் தோறும் மக்களின் பயன்பாட்டில் அதிகம் உள்ள காய். கத்தரி ஆகும். இதை டிசம்பர், ஜனவரி மாதத்தில் தொடங்கி மே வரை பயரிடலாம். ஆனால் தற்பொழுது அதிகமான விவசாயிகள் கத்தரியினை வருடம் முழுவதும் நடுகை செய்கின்றார்கள்.



# இலாபம் தரும் வகையில் கத்தரி பயிரிடுவது எவ்வாறு?



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை

இலாபம் கொடுக்கும் பயிர்களில் கத்தரியும் ஒன்று என்றால் அது மிகையாகாது.

கத்தரியில் மட்டுமே ஏனைய காய்கறிப் பயிர்களைப் போன்று அல்லாமல் ஒரு தடவை விளைச்சலை பெற்றுக் கொண்ட பிற்பாடு மீண்டும் அம்மரத்தினை கவ்வாத்து செய்து இன்னுமொரு தடவை விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியும்.

விவசாயிகளின் தற்போதைய பருவத்துக்கு ஏற்ற தோட்டப் பயிர்களில் கத்தரியும் ஒன்று. ஆகையால் கத்தரியை பயிர் செய்து அதிக லாபம் பெறலாம்.

பள்ள நிலங்கள் தவிர்த்து. அனைத்து மேட்டு நிலங்களிலும் பயிரிடலாம்.

கத்தரி பயிர்செய்கை ஆனது சொட்டு நீரப்பாசன முறை, மற்றும் தூவல் பாசன முறை, இறவை பாசனம் என மூன்று முறைகளில் பயிரிடப்பட்டாலும் சொட்டுநீர் பாசனம் மற்றும் தூவல் நீர்ப்பாசன முறை மூலமே விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கின்றது.

காரணம் பயிர்களுக்குரிய நீர் தேவை என்ன என்பதை அறிந்து. தேவைக்கேற்ற அளவுகளில் கொடுப்பதனால்.

அதோடு இப்பாசன முறை மூலம் நீரினையும் சிக்கனமாக பயன்படுத்த முடியும்.

இறவை முறையில் பயிர் செய்யும் விவசாயிகள் அதிகளவான பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள். அதாவது அதிகளவான நீர் தேவை. அதிக அளவில் நீர் தேங்கி நிற்பதால் செடிகளில் வேர் அழுகல் ஏற்பட்டு இறந்து விடுகின்றது.

அத்தோடு நீர் தேங்கி நிற்பதனால் செடிகளைச் சுற்றி அதிகளவான சிறு எறும்புகள் செடிகளில் தங்கிவிடுகின்றது.

ஆனால் எமது முன்னோர்கள் கத்தரி மட்டுமல்ல அதிகமான பயிர்களை இறவை பாசன முறையினை பயன்படுத்தியே பயிரிட்டார்கள்.

கத்தரிச் செடி மட்டுமல்ல வேறு எந்த பயிராக இருந்தாலும் செடிகளுக்குரிய நீர் தேவையினை அறிந்து போதுமான அளவு நீரை மட்டுமே நாங்கள் கொடுக்க வேண்டும். (அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு) நீரின்றி அமையாது இவ்வுலகு. விவசாயிகள் ஆகிய நாங்கள் நீரின் தேவையினை உணர்ந்து செயற்பட வேண்டும்.

### பயிரிடும் காலம்

நாள் தோறும் மக்களின் பயன்பாட்டில் அதிகம் உள்ள காய் கத்தரி ஆகும். இதை டிசம்பர், ஜனவரி மாதத்தில் தொடங்கி மே வரை பயரிடலாம்.

ஆனால் தற்பொழுது அதிகமான விவசாயிகள் கத்தரியினை வருடம் முழுவதும் நடுகை செய்கின்றார்கள்.

நீரப் பிரச்சனை இருக்கும் பண்ணைகளில் கத்தரி பயிரிட நினைத்தால். மேட்டுப் பகுதிகளில் மாரிகாலங்களிலும். பள்ளப் பகுதிகளில் கோடை காலங்களிலும் நடுகை செய்யலாம்.

### மண்ணின் தன்மை

நல்ல வடிகால் வசதியுள்ள மணல் கலந்த வண்டல் மண், களிமண் கலந்த வண்டல் மண், செம்மண் போன்ற நிலங்கள் கத்தரி பயிரிட ஏற்றவையாகும்.

மணல் மற்றும் தனி களிமண்ணில் பயிரிட இயலாது.

விதை நேர்த்தி: 95 வீதம் முளைதிறன் இருக்குமாக இருந்தால். ஓர் ஏக்கருக்கு 150 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

### இடைவெளி, செடி எண்ணிக்கை

பொதுவாக கத்தரி ரகத்தின் தன்மையைப் பொறுத்து இடைவெளி விடப்படுகின்றது. அதோடு தேர்வு செய்யும் ரகத்திற்கு ஏற்ப செடியின் எண்ணிக்கை மாறுபடும். மிதமான வளர்ச்சி உள்ள ரகங்களாக இருந்தால் ஒரு பாத்தியில் இரண்டு செடிகள் வீதம் 11/2 அடி இடைவெளி இருக்குமாறும். செடிகளின் வரிசைக்கு வரிசை இரண்டரை அடி இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு செடியாக நடுவதாக இருந்தால் மேற்கூறிய இடைவெளிகளின் அள



வீடுகள் முற்றாக மாறுபடும்.

அதாவது அதிக வளர்ச்சியுள்ள ரகங்களை உயர் பாத்தியில் ஒரு வரிசையில் ஒரு செடிக்கும் மற்றொரு செடிக்கும் 1 1/2 அடி இடைவெளிகளில் நட வேண்டும்.

### நடவு முறை

கத்தரி நாற்றுக்களை நடுவதற்கு முன்பு 8 முதல் 12 மணி நேரம் பதியம் வைக்கப்பட்ட உயர் பாத்திகளை சொட்டு நீர்ப் பாசனத்தைப் பயன்படுத்தி நன்கு நனைக்க வேண்டும் அதன் பிறகு பார்த்தியிலிருந்து கன்றுகளைப் பிரித்தெடுக்க வேண்டும். பிரித்தெடுத்த நாற்றுக்களை மேற் குறிப்பிட்ட இடைவெளியில் நட வேண்டும். நடவு செய்த ஒரு வாரத்துக்குப் பின்பு நடுகை செய்த கன்றுகளில் ஓரிரு கன்றுகள் இறந்திருந்தால். அந்த கன்றுகளை பிடுங்கி விட்டு மீண்டும் அதே இடத்தில் புதிய நாற்றுக்களை நட வேண்டும்.

### நீர்ப்பாசனம், நீர்வழி உரமிடல்

தினமும் சொட்டு நீர்ப் பாசன முறையாக இருந்தாலும். தூவல் நீர்ப்பாசன முறையாக இருந்தாலும் ஒரு மணி நேரம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

நடப்பட்ட பயிர்களுக்கு தேவையான அளவு நீரில் கரையும் உரத்தை நீர் தொட்டியினுள் கலந்து விட வேண்டும்.

நீர்வழி உரமாக ரசாயனத்தை தவிர்த்து இயற்கை உரமான ஜீவாமிர்தம், பஞ்சகாவ்யா, மீன் அமிலோ அமிலம் போன்றவற்றை வாரத்தில் இரண்டு தடவை வீதம் பயன்படுத்தி வந்தால் பயிரின் வளர்ச்சியும் அதிகமாக இருக்கும். அத்தோடு பயிரின் இலைகள் அடர் பச்சை நிறமாகவும் இருக்கும்.

### செய்யவேண்டிய நேர்த்தி

கத்தரி கன்றுகள் நடவு செய்த நாளிலிருந்து 30ஆவது நாளிலும் மற்றும் 60ஆவது நாளிலும் கட்டாயம் களை எடுத்து மண் அணைக்க வேண்டும்.

பின்பு கத்தரி அறுவடை செய்து ஓய்ந்த பிற்பாடு அனைத்து கத்தரி மரங்களையும் நிலத்திலிருந்து நான்கு அல்லது ஐந்து இஞ்சி விட்டு முற்றாக கவ்வாத்து(வெட்டுதல்) செய்து களை எடுத்து மண் அணைக்க வேண்டும்.

இவ்வாறு செய்தால் மட்டுமே இரண்டாவது தடவையும் துளிர்விட்டு காய்க்க ஆரம்பிக்கும்.



### பீடைக் கட்டமைப்பு

கத்தரியைப் பொறுத்தவரை வேர் அழுகல், குருத்து இலைகள் வாடுதல், காய்களில் துளை விழுதல் போன்ற பிரச்சினைகள் அதிக அளவில் ஏற்படுகின்றது.

இவ்வாறான பிரச்சினைகளை இயற்கை கிருமி நாசினிகளைக் கொண்டு முற்றாக கட்டுப்படுத்த முடியும்.

1.அதாவது வேர் அழுகலை கட்டுப்படுத்துவதற்கு பூண்டு கரைசலில் சமமான அளவு சாம்பலை கலந்து அதனை வடிகட்டி எடுத்து கத்தரிக்கன்றுகளின் அடிப்பகுதியில் தெளிக்க வேண்டும்.

2.இலை, குருத்து வாடுதலைக் கட்டுப்படுத்துவதற்கு கற்பூர கரைசலை எடுத்து அதனுள் சமமான அளவு சாம்பலை கலந்து வடிகட்டி எடுத்து செடிகளின் இலை மற்றும் குருத்துப் பகுதிகளில் படும் அளவிற்கு தெளிக்க வேண்டும்.

3காய்களில் துளை விழுவதை தடுப்பதற்கு அக்கினி அஸ்திரா போன்ற இயற்கை கிருமி நாசினியை பயன்படுத்தலாம்

### புழுக்களற்ற காய்களை பெறுவது எப்படி?

ஏரிக்கல மரம் அல்லது கருவேல மரப் பட்டையினை உரித்து தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்.

சுமார் 5கிலோ பட்டையை 7 லிட் தண்ணீரில் ஊற வைக்கலாம். 48 மணி நேரம் ஊற அடர் சிவப்பு நிறம் கொண்ட திரவம் கிடைக்கும்.

1 லிட்டர் உற்பத்தி செய்த திரவத்தினை 5 லீற்றர் தண்ணீரில் திரவத்தினை கலந்து செடிகள் நன்கு நனையுமாறு தெளிக்கலாம்.

இக்கரைசலை வீரியமாக பயன்படுத்துவதாக இருந்தால் 5 லிற்றர் தண்ணீருக்கு ஒன்றரை லிட்டர் கரைசல் வீதம் கலந்து 15 நாட்களுக்கு ஒரு தடவை தெளிக்கலாம்.

இதனால் காய்ப்புழு, தண்டுப்புழு மறைந்து அதிக பளபளப்பான காய்கள் கிடைக்கும்.

### அறுவடை,

விவசாயிகள் மேற்குறிப்பிட்ட முறைகளை சரியாக கையாண்டால் 60 முதல் 120 நாள்கள் வரை அறுவடை செய்யலாம்.

வீரிய ஒட்டு ரகத்தில் ஏக்கருக்கு 10 முதல் 15 டன்கள்( 10000kg - 15000 kg ) வரை விளைச்சல் கிடைக்கும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை. கத்தரி அறுவடையானது வெவ்வேறு ரகத்திற்கேற்ப நாள்கள் மாறுபடும்.

கத்தரி செடியை பொறுத்தவரை எந்தவொரு ரசாயனமும் அல்லாமல் முற்றுமுழுதாக இயற்கையான முறையில்.

இயற்கை கிருமிநாசினி, இயற்கை உரம், இயற்கையான பயிர் வளர்ப்பு ஊக்கி போன்றவற்றை பயன்படுத்தி ஓரிரு விவசாயிகள் சாமர்த்தியமாக உற்பத்தி செய்கின்றார்கள்.

சந்தையில் புழு குத்திய காய்களுக்கு கேள்வி அதிகம் என்பதையும் நினைவில் வையுங்கள்.

மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

Ph: 0770239784
WhatsApp:0769196445

கடந்த சில மாதங்களாக திருகோணமலை மாவட்டத்தில் இயங்கிவரும் E-wing சுதந்திரத்திற்கான பெண்கள் மற்றும் சிறுவர் வலுவூட்டல் மையத்துடன் இணைந்து குறிப்பிட்ட சில கிராமங்களுக்கு களப்பயணம் சென்றபோது பெண்களின் வாழ்வியலை பதிவு செய்யும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்தவகையில் சந்தோசபுரத்தில் பழங்குடியினச் சமூகப் பெண்கள் குழுவின் தலைவி லக்சுமியையும் அவர்களது குழுவினையும் அவர்களது கிராமமாகிய சந்தோசபுரத்தில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

அவர்களுடனும், அங்குள்ள தலைவர்களுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொண்டு பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பழங்குடிச்சமூகப் பெண்களின் வாழ்வியல் பற்றிய பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது.

இலங்கையின் வரலாற்றைப் பொறுத்தவரையில் அதன் தோற்றத்துடன் முக்கியத்துவம் பெறும் சமூகமாக பழங்குடியினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். எனினும் தென்னிலங்கை பூர்வீக சமூகத்திற்கு வழங்கப்படும் முக்கியத்துவம் கிழக்கிலங்கை வாழ் பழங்குடி சமூகத்திற்கு வழங்கப்படுவதில்லை. எனினும் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் வாழும் பழங்குடிச் சமூகத்தை போலவே, கிழக்கு கடற்கரை வாழ் பழங்குடியினரும் சமாந்தரத் தொன்மையான வரலாற்றைக் கொண்டவர்களாவர். பழங்குடி சமூகத்தைப் பற்றிய இலக்கியங்கள் குறிப்பாக காலனித்துவ மானிடவியல் ஆய்வுகள் பின்வருமாறு விபரிக்கின்றன.

இந்தச் சமூகங்கள் தென்பிராந்தியத்தைச் சேர்ந்த பழங்குடியினரின் உறவினர்கள் எனவும், வரலாற்றின் ஒரு கட்டத்தில் சமூக மற்றும் புவியியல் காரணங்களால் - குறிப்பாக உள்நாட்டு இடப்பெயர்வு, உள்நாட்டு யுத்தம் பாகுபாடு ஒரங்கட்டப்படுதல் போன்ற காரணிகளால் இவர்கள் தமது ஆதிப்பழங்குடியினை விட்டுப் பிரிந்ததனர் எனவும், இதன் விளைவாக தமக்கென தனித்துவமான கலாச்சாரத்தையும் அடையாளத்தையும் உருவாக்கிக்கொண்டனர் எனவும் விபரிக்கின்றது.

கிழக்கிலங்கை கரையோரப் பழங்குடிச் சமூகங்கள் இயற்கை மற்றும் அவர்களைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலுடன் நெருக்கமாகப் பின்னிப்பிணைந்த தனித்துவமான வாழ்க்கை முறையைக் கொண்ட குறிப்பிட்ட ஒரு குழுவாகும். திருகோணமலையின் கரையோரத்தில் உள்ள உப்பூரல் மூதூர் சம்பூர் மாவடியூற்று கோபால புர பட்டினம் தோப்பூர் ஆகிய பகுதிகளை சூழவுள்ள பகுதிகளிலும் மட்டக்களப்பில் உள்ள சில பகுதிகளிலும் இந்தப் பழங்குடியினரின் பூர்வீக குடிகள் வாழ்ந்ததாக கருதப்படுகின்றது. இவர்களில் திருகோண



# பழங்குடிப் பெண்களின் வாழ்வியல் போராட்டம்

- காயத்திரி நளினிகாந்த் -

> **“ பெரும்பாலான பழங்குடியினப் பெண்கள் தேன் சேகரித்தல் விறகு சேகரித்தல் சேனைப் பயிர்ச்செய்கை ஏரிகளில் மீன்பிடித்தல் போன்ற வாழ்வாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இம் மக்கள் காடுகளுடன் நெருக்கமாக உறவாடுவதால், காடுகள் சிற்றோடைகள் ஆறுகள் மற்றும் கடல் ஆகியவற்றை தமது வாழ்வாதாரத்துக்காகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். அவை அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்களாகவும் உள்ளன. ”**

மலை சம்பூரில் உள்ள சந்தோசபுரத்தில் வாழும் பழங்குடி சமூகத்தினர் தம்மை பழங்குடியினர் என அடையாளப்படுத்த விரும்புகின்றர்கள். இதனால் தம்மை ராணிகுவேனியின் வழித்தோன்றல் என கருதுகின்றனர். ‘குவேனி பூர்வீக மக்கள் நலச் சங்கம்’ என சந்தோசபுரத்தில் உருவாக்கப்பட்ட பழங்குடி அமைப்பின் மூலம் அவர்கள் பெருமை கொள்வதனூடாக இதனை தெளிவாகக் காண முடிகின்றது.

இம் மக்கள் காடுகளுடன் நெருக்கமாக உறவாடுவதால் இங்கு வாழும் ஆண்கள் மற்றும் பெண்கள் காடுகள் சிற்றோடைகள் ஆறுகள் மற்றும் கடல் ஆகியவற்றை தமது வாழ்வாதாரத்துக்கென பயன்படுத்தியதோடு அவை அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்களாகவும் கருதப்படுகின்றன. மேலும் பெரும்பாலான பெண்கள் தேன் சேகரித்தல், விறகு சேகரித்தல், சேனைப் பயிர்ச்செய்கை ஏரிகளில் மீன்பிடித்தல் போன்ற வாழ்வாதார செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இருப்பினும் தற்போதய நில அபகரிப்பு மற்றும் பூர்வீக நிலங்களை இழந்ததன் விளைவாக தமது சொந்த விவசாய நிலங்

களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை காணப்படுவதாகவும் கடந்த காலங்களில் தமது கிராமத்துக்கு சொந்தமான சுமார் 75-80 ஏக்கர் நிலப் பரப்பு 2010- 2011 இல் அரச அதிகாரிகளால் அனல் மின் நிலையத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டதால் விவசாய நடவடிக்கைளின் ஊடாகத் தமது சுய தேவையினை பூர்த்தி செய்து கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக லட்சுமி விபரித்தார்.

மேலும் அவர் கூறுகையில் உயர் பாதுகாப்பு வலயமாக கருதப்பட்டு தடை செய்யப்பட்ட நிலத்திற்குள் தமது பாரம்பரிய கோவில் காணப்படுவதால் தமது பாரம்பரிய வழிபாட்டினைத் தொடரத்தடையாக உள்ளதாகவும் கூறினார்.

மேலும் பெண்கள் குழுவில் உள்ள பவானி கூறுகையில், எமது பெண்களில் அதிகமானவர்கள் ஈடுபடும் பிரதானமான மற்றும் பாரம்பரியமான வாழ்வாதாரங்களான தேன் சேகரித்தல் மற்றும் விறகு சேகரித்தல் என்பனவற்றினை தடைசெய்யும் முகமாக காடழிப்பினை ஏற்படுத்துவதாக காவல் துறையினரால் தாங்கள் கைது செய்யப்படுகின்றோம். இருப்பினும் குறித்த செயற்பாட்டினை ஏனைய சமூகத்தினர் மேற்கொள்ளும் போது பாரிய தீவிரம் காவல்துறை மேற்கொள்வதில்லை எனவும் தமது காணியில் ஆதிக்கம் செலுத்



தும் புதிய உரிமையாளர்களின் அனுமதியின்றி தாங்கள் தமது சொந்த பூர்வீக நிலங்களில் இருந்து விறகு சேகரிக்கக் கூட முடியாது என விபரித்தார்.

இந்த நிலையானது சட்ட அமுலாக்கல் தரப்பிலும் பழங்குடியினர் தரப்பிலும் பழங்குடி சமூகங்களின் பாரம்பரிய வாழ்வாதாரங்கள் பற்றிய அறியாமை மற்றும் விழிப்



புணர்வு இல்லாமையினை சுட்டி நிற்பதோடு பழங்குடி பெண்கள் சமூகத்திற்கு எதிரான பாகுபாடு காணப்படுவதையும் சுட்டி நிற்கின்றது.

இவர்கள் வாழும் பகுதியில் அடிப்படை தேவைகளான குறிப்பாக நீர் வசதி மற்றும் மின்சார வசதி போன்றன இல்லாதது பாரிய பிரச்சினையாக இனம் காட்டிய போதிலும் சந்தோசபுரத்திற்கு ஓரளவு தண்ணீர் வசதி வழங்கப்பட்டாலும் சமுர்த்தி போன்ற அரசாங்க மானியங்கள் கிடைக்கின்ற வீடுகளுக்கு குடிநீர் குழாயை பெற்றுக்கொள்ளக்கூட முடியாதநிலையே உள்ளது. எனவே சந்தோசபுரத்தில் உள்ள பழங்குடிப் பெண்கள் அயலவர் வீடுகள் கோவில்கள் மற்றும் பாடசாலைகளில் உள்ள கிணறுகளையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இருப்பினும் சில சமயங்களில் அவற்றினைப் பெற்றுக்கொள்வதிலும் ஏனைய சமூகங்களால் தடை ஏற்படுத்தப்படுகின்றது. சமூகத்தலைவரின் கூற்றுப்படி ஏனைய சமூகங்கள் மத்தியில் நிலவும் 'எங்கள் மீது துர்நாற்றம் வீசுகிறது தங்கள் சுத்தமாக இல்லை' என்ற எண்ணக்கருவானது பெண்கள் மற்றும் ஏனைய பழங்குடியினர் மீதான ஏனைய சமூகத்தின் பாகுபாட்டையும் வன்முறையினையும் சுட்டிநிற்கின்றது எனக் கூறினார்.

மேலும் சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அடிப்படைத்தேவைகளுக்கான போதிய அணுகல் இன்மையானது வறுமையின் விளிம்பில் உள்ள பெண்கள் சமூகத்தை மேலும் அதிகப்படுத்தும் காரணியாக அமைந்துள்ளது

கட்டாயக்கல்வி அமுல்படுத்தப் படுகின்ற போதும் சந்தோசபுரம் வாழ் பெண்பிள்ளைகளின் கல்வி மட்டம் மிக குறைவாகவே உள்ளது. ஏனெனில் அவர்கள் பழங்குடியின அடையாளத்தை பின்பற்றி ஏனைய சமூகங்களுடன் இணைந்து இரண்டாம் நிலைப் பாடசாலைகளுக்குச் செல்லும் போது பிள்ளைகள் வேறுபாடாக நடத்தப்படுகிறார்கள். உதாரணமாக விளையாட்டு கலை மற்றும் கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்க குறித்த சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இவர்கள் ஏனைய சமூகக் குழந்தைகளால் கேலி செய்யப்படுகிறார்கள். சில வேளைகளில் அவர்கள் சுத்தமற்றவர்கள் என கருதப்படுவதாலும் பொதுவான குடிநீர் வசதியைகூடப் பயன்பத்துவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இந்த நிலையல் ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகள் அதிகமாகப் பாதிக்கப்படுவதால் பெண் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியினை தொடர்வதற்கு தடையாக உள்ளது. இந்நிலை அவர்கள் இளம் பருவத்திலேயே திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் காரணமாகின்றது.

சந்தோசபுரத்தில் வாழும் பழங்குடிப் பெண்கள் என்ற அடையாளமானது அவர்களில் நேர் எதிர் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது எனலாம். அப்பெண்கள் ஆணாதிக்கக் கட்டமைப்போடு போராடுவது மட்டுமின்றி ஏனைய சமூக பாகுபாட்டுடனும் போராடவேண்டியுள்ளதனை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது. மேலும் அவர்களின் ஆகக்குறைந்த அடிப்படை வசதிகளை பெறுவதற்குக்கூட அரச மற்றும் சமூக ஆதிக்க கட்டமைப்புகளுடன் தொடர்ச்சியாகப் போராடவேண்டிய நிலையே நடைமுறை வாழ்வியலாக உள்ளது.

எனவே இங்கு உள்ள பெண்கள் தமது சமூக உரிமை மற்றும் பெண்கள் உரிமை பற்றிய அறிவு பெற வலுவூட்டப்படவேண்டிய அவசியம் காணப்படுவதோடு அரச நிறுவனங்கள் அதிகாரிகள் இவர்களது வாழ்வியலையும் பழங்குடி சமூக உரிமைகளையும் உணர்வுகளையும் அறிந்தவர்களாகவும் மற்றும் ஏனைய சமூகங்கள் மத்தியில் பழங்குடியினரை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்படும் போது இச்சமூகத்தின் இருப்பு நின்று நிலை பெற வழிவகுக்கும்.

> பல புதிய பண்ணையாளர்கள் நினைப்பது போல் மாடு வளர்ப்பு இலகுவான காரியம் கிடையாது. முடிந்தவரை புதிய பண்ணையாளர்கள் பண்ணைகளைத் தொடங்க முன் உங்கள் உங்கள் பிரிவுகளில் உள்ள கால்நடை வைத்தியரிடம் போய் உங்கள் திட்டத்தைச் சொல்லுங்கள். அவர்கள் அந்தப் பிரிவுக்கு பொருத்தமான கால்நடைகளை முகாமைத்துவ முறைகளை பரிந்துரைப்பார்கள்.



# ஊருக்குப் பொருத்தமான கால்நடை வளர்ப்பு



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

என்னிடம் ஒரு புலம் பெயர்ந்த தமிழர் வந்திருந்தார். தான் இங்கு ஒரு கறவை மாட்டுப் பண்ணை ஒன்றைத் தொடங்க போவதாகவும் இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும் என வும், இடம் பார்த்து விட்டதாகவும் நல்ல பால் மாடுகள் வாங்க வழிகாட்ட வேண்டும் என சொன்னார். "நல்ல பால் மாடு என எதைக் கருதுகிறீர்கள்?" எனக் கேட்டேன். ஒரு பத்து பதினைஞ்சு லீட்டர் கறக்கும் பால் மாடு வேண்டும் என்றார். தான் கண்டிப் பகுதியில் சில மாடுகளை பார்த்து விட்ட தாகவும், யாழ்ப்பாணத்தில் இருந்தும் மாடுகளை கொண்டு வர எண்ணியதாகவும் சொன்னார். "நீங்கள் கொண்டு வருவது எந்த வழியில்? நல்ல வழியா? கள்ள வழியா?" எனக் கேட்க," நல்ல வழிதான்". எந்த கால்நடைப் பிரிவில் இருந்து என கேட்க, அவருக்கு இது தொடர்பாக எந்த புரிதலுமே இருக்கவில்லை. அவரின் தடுமாற்றமான பதில்களின் அடிப்படையில் இது ஒரு தவறான வழியில் வரும் மாடுகளாக இருக்கும் என உணர்ந்து கொண்டேன் . நான் அந்தப் பிரிவின் கால்நடை வைத்தியர் என்றபடியால் மாடுகள் வந்த பின் ஏற்படத்தக்க சட்டச் சிக்கல்களை தீர்க்கவும், குறிப்பாக மாடுகளை பதிவு செய்ய ஓர் அறிமுகத்துக்காகவுமே என்னிடம் வந்திருக்கிறார். இதனை உணர்ந்து கொண்ட நான் வெளியூர் மாடுகள் தொடர்பாக உள்ள பிரச்சனைகளை பட்டியலிட்டேன்.

மாடுகள் போன்ற விலங்குகள் சுற்றுச் சூழலில், உணவில், முகாமைத்துவ முறையில் ஏற்படும் சிறிய மாற்றத்தையே தாங்க முடியாதவை. பாலுற்பத்தி குறையும், வளர்ச்சி பாதிக்கும், நோய்வாய்ப்படும். சில வேளைகளில் இறப்புக் கூட நிகழும். தாம் வாழ்ந்த சூழலுக்கு உடலளவில் , மனதளவில் ஒன்றிணைந்தவை. அந்த மாற்றம் நிகழும் போது அழுத்தத்துக்கு உள்ளாகின்றன. இந்த நிலையில் நீண்டகாலமாக ஓரிடத்துக்கு இசைவாக்கப்பட்ட ஒரு மாட்டை புதியதொரு இடத்துக்கு மாற்றும் போது அவை நான் கூறிய வகையில் பாதிக்கப்படுகின்றன. மனிதர்களே புதிய சூழலுக்கு மாறும்போது கஷ்டப் படுகின்றனர். நோய்வாய்ப்படுகின்றனர். மேற்படி புலம்பெயர்ந்த தமிழருக்கு தெளிவாக இது தொடர்பாக கூறிய போதும் அவர் புரிந்து கொள்ளவில்லை. யாழ்ப்பாணமும் வவுனியாவும் ஒரே மாதிரியான இடம்தானே? அது ஒன்றும் நடக்காது, தான் பார்த்துக் கொள்கிறேன் மின் விசிறி பூட்டினால் வெக்கை குறையும் என் வசதிக்கு தேவைப்பட்டால் குளிரூட்டியும் பூட்டுவேன் எனக் கூறிவிட்டு வெளியேறினார்.

ஒன்றரை வருடம் கடந்த பின் ஒருவர் என்னை சந்திக்க வந்திருந்தார். தான் பணிபுரியும் பண்ணையில் மாடுகள் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் கொண்டுவரும் போது பத்து பதினைந்து லீட்டர் கறந்த மாடுகள் தற்போது இரண்டு லீட்டருக்கு குறைவாகவே கறப்பதாகவும், அது கன்றுக்கே காணாது என்றார். பண்ணையை போய் பார்த்தபோது எனக்கு மிகப்பெரும் அதிர்ச்சி. எனது பிரிவில் எனக்கு தெரியாமல் இவ்வளவு பெரிய பண்ணையா என பண்ணை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. வெறும் கட்டிடங்களாகவே காணப்பட்டன. எழுபது எண்பது வரையிலான மாடுகளை காணமுடிந்தது. அதிகளவு ஜேர்சி இன மாடுகளும் குறிப்பிட்டளவு பிரீசியன், AFS போன்ற மாடுகளும் காணப்பட்டன. ஏறக்குறைய எல்லா மாடுகளும் காய்ந்து கருவாடு போலக் காணப்பட்டன. அவை உண்ணத்தக்க பசுந்தீவனங்களும் பயிரிடப்படவில்லை. பசுந்தீவனம் பயிரிடப்பட்ட இடங்கள் தூர்ந்துபோய் மாடுகள் மேய திறந்து விடப்பட்டிருந்தன.

பண்ணையின் உரிமையாளரைப் பற்றி வினவியபோது அவர் புலம்பெயர்ந்த தமிழர். வருடத்தின் சில காலம் இங்கிருப்பாராம். மாடுகளுடன் செலவிடுவாராம். மாடுகளை யாழ்ப்பாணம் மற்றும் கண்டி

யிலிருந்து கொண்டு வந்தவராம். ஆரம்பத்தில் தனியார் வைத்தியர் ஒருவர் மாடுகளைப் பார்த்தாராம். அவர் மருந்துகள், தீவனங்கள், உபகரணங்களை ஓர் இடத்தில் ஒழுங்குபடுத்தி கொடுத்தவராம். பிறகு கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை வர வேறு வைத்தியரை நாடியிருக்கிறார்கள். அங்கும் ஏதோவொரு பிடுங்குப்பாடு வர ஊரில் சட்டவிரோத சிகிச்சையில் கோலோச்சிய ஒரு போலி கால்நடை வைத்தியரை நாடியிருக்கிறார்கள். அவருடனும் ஏதோ பிரச்சினை வர என்னிடம் வந்திருக்கிறார்கள். நான் ஏன் முதலே என்னிடம் வர வில்லை என கேட்க, முதலாளிக்கு அரச வைத்தியத்தில் உடன்பாடு இல்லை என பதில் வந்தது. தான் இந்த பண்ணையை பாரம் எடுத்து இரண்டு மூன்று மாதம்தான் ஆகிறது. மாடுகளின் இந்த பரிதாப நிலையை பார்த்துவிட்டுத்தான் நானாக உங்களிடம் வந்ததாக சொன்னார். உரிமையாளரின் படத்தை அவர் காட்டிய போது எல்லாம் புரிந்து போனது. ஆரம்பத்தில் நான் சொன்ன என்னிடம் சவால் விட்ட புலம் பெயர் தமிழர்.

ஆரம்பத்தில் எல்லாமாக இருநூறு வரையான மாடுகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. முறையற்ற பராமரிப்பு காரணமாக அவை கொஞ்சம் கொஞ்சமாக நோய்வாய்ப்பட்டு இறக்கத் தொடங்கின. எந்த வித முகாமைத்துவ மாற்றங்களையும் செய்யாது நோய்களையும் இறப்புகளையும் வைத்தியர்தான் குறைக்க வேண்டும் என ஆரம்ப வைத்தியரிடம் சண்டை பிடித்ததோடு மருத்துவ செலவையும் வழங்காது விட்டிருக்கிறார். இப்படியே இவர் தொடர்ச்சியாக செய்ய யாரும் சிகிச்சை செய்ய வரவில்லை. மாடுகள் இறந்து நான் பார்க்கும் போது எழுபது வரையே இருந்தன. முறையான குடற்புழு சிகிச்சை,ஆரம்ப பராமரிப்பு இல்லாததன் காரணமாக கன்றுகள் கணிசமாக இறந்து போயின. ஊட்டச்சத்து குறைவால் பெரிய மாடுகளும் மறுபடி சினைக்கு வரவில்லை. பண்ணையை அமைக்கும்போது எந்த வித முறையான தொழில் நுட்ப ஆலோசனையும் இன்றி எழுந்தமானமாக அமைத்திருக்கிறார். கடும் வெய்யிலும் வெக்கையும் நிகழும் வவுனியாவில் கொங்றீட்டால் மூடி கட்டிய பண்ணைகளை அமைத்திருக்கிறார். அவரின் நாட்டிலும் அம்பேவல பண்ணையை பார்த்த மட்டிலும் இந்த கட்டிடம். அத்துடன் you tube பண்ணைகளின் மாதிரியும் பயன் பட்டிருக்கிறது. இருக்கும் வெக்கைக்கு மாடுகள் மேலும் சிரமப்பட்டு இரவில்கூட அந்த பட்டிக்குள் போக விரும்பாதாம்.

மாட்டு இனங்களை பற்றிக் குறிப்பிட்டே ஆக வேண்டும். இலங்கையில் ஒவ்வொரு காலநிலை வலயத்துக்கும் (Agro climatic zone) ஒவ்வொரு மாட்டினங்கள் இனப்பெருக்க கொள்கையால் (Breeding policy) வரையறுக்கப்பட்டுள்ளன. குளிர் வலயத்துக்கு பிரீசியன் போன்ற ஐரோப்பிய இனங்களும் வெப்ப வலயத்துக்கு உள்ளூர், இந்திய, ஜேர்சி கலப்பு இனங்கள் இடைப்பட்ட பகுதிக்கு மேற்படி மாடுகளின் கலப்பு இனங்கள் என அவை தீர்மானிக்கப்பட்டிருக்கும். அதாவது வெப்பநிலை சாரீரப்பதன், நோய்கள் என சகலதும் கருத்திற் கொள்ளப்பட்டு இவை வரையறுக்கப்படும். இவற்றை மீறுவதாயின் அதற்குரிய வசதிகளை செய்ய வேண்டும். உதாரணமாக சவூதியில் உள்ள அல்-மராய் போன்ற அதிக வெப்பம் உள்ள பகுதியில் மாடுகளை வளர்க்க மூடிய பண்ணைகள் பொருத்தமான வெப்ப நிலை சாரீரப்பதன் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். அது போல பல நாடுகளில் பண்ணைகள் பெரும் செலவில் உச்சபட்சமான கால்நடை வைத்திய ஆலோசனையுடன் அமைக்கப்பட்டு உயர்வான முகாமைத்துவம் வழங்கப்படும். ஆனால் நான் சொன்ன பண்ணை அப்படியல்ல. எல்லாம் கலந்த கலவை.

இவரின் மாடுகள் வெப்ப அயர்ச்சியால், உண்ணிக் காய்ச்சலால் சிரமப்பட்டன. உள்ளே (intensive) வைத்து வளர்க்கத்தக்க மாடுகளை திறந்து மேய்ச்சலில் விட்டிருக்கிறார். அதன் காரணமாகவும் அவை நேரடி வெக்கைக்கு பாதிக்கப்பட்டன.

புலம்பெயர்ந்த உரிமையாளர் உண்மையில் மாடு வளர்ப்பதில் ஏனோ ஆசைப்பட்டு விட்டார். பலருக்கு வேலை கொடுக்க விரும்பியது நல்ல விடயம் தான். எனினும் இதற்கு முன் இது தொடர்பாக அவருக்கு அனுபவமோ அறிவோ கிடையாது. வெறும் கேள்வி ஞானமும் you tube ஞானமும் தான். தனது பண்ணையின் பெயரில் ஒரு face book, watsup குழுவும் வைத்து ஏனையவர்களுக்கு ஆலோசனை வேறு. ஆரம்பத்தில் வெற்றிகரமான பண்ணை எப்படி நடத்துவது என்ற மாதிரியும் பிறகு பண்ணை நட்டத்தில் இயங்க பண்ணையை எப்படி தோல்வியடையாமல் நடத்துவது என்பது பற்றிய பதிவுகள் இடம் பெற்றிருந்தன. இதில் சிறப்பு என்னவென்றால் இவரை தீவிரமாக பின்பற்றும் பல பண்ணையாளர்களும் உள்ளதுதான்.

பல முகாமைத்துவ மாற்றங்களை சொல்லி வந்தேன். முக்கியமாக மீதமாக இருக்கும் மாடுகளை ஒழுங்காக பராமரிக்க சொன்னேன். அவை அந்தப் பகுதிக்கு பொருத்தமற்றவை என்பதை இறுக்கமாக சொன்னேன். நான் கடும் தொனியில் சொல்லி வந்தது உரிமையாளருக்கு பிடிக்கவில்லை போலும். அரச சேவை இலங்கையில் அப்பாவி பண்ணையாளர்களை வஞ்சிப்பதாக தனது இணைய குழுக்களில் பதிவிட்டிருந்தார். இதற்கு அவரின் நண்பர்கள் மேலும் அரச கால்நடை வைத்திய சேவையை திட்டிப் போட்டிருந்தனர். பலர் பகிர்ந்தனர்.

நான் அவதானித்த வரையில் பல பண்ணையாளர்கள் குறிப்பாக புதியவர்கள் மாடுகளின் பாலுற்பத்தியை மட்டுமே பார்க்கிறார்கள். பத்துப் பதினைந்து லீட்டர் வரை அதிக பால் வர வண்டும் அவ்வளவு தான். ஓர் இயந்திரம் போல கருதுகிறார்கள். அப்படி அதிக பால் வர முகாமைத்துவம் சிறப்பாக அமைய வேண்டும். மாட்டுக்கு பொருத்தமான சூழல் அமைய வேண்டும். மாடு சூழலுக்கு பொருத்தமாக அமைய வேண்டும். அதற்குரிய முறையான தீவனம் வழங்க வேண்டும். முக்கியமாக எந்த வித அழுத்தமும் (stress) இன்றி மாடு சந்தோசமாக இருக்க வேண்டும் என்பதை அறிவதில்லை. எங்கேயாவது நன்றாக பால் கறக்கும் மாடுகளை வாங்கி வருவார்கள். ஆனால் முறையான முகாமை செய்ய மாட்டார்கள். மாடுகள் புதிய இடமாற்றம் காரணமாக அழுத்தத்துக்கு உள்ளாகி முறையாக பால் தராது. மெலியும். பிறகு யாரிடமாவது போய் கனியுப்பு அது இது என வழங்குவார்கள். ஊசி போடுவார்கள். மாடு தெளியாது. சினைப்படாது. பிறகு யாரையாவது குறை சொல்வார்கள். மாடு வளர்ப்பையே கை விடுவார்கள்.

உங்கள் உங்கள் பகுதிக்கு பொருத்தமான மாடுகளை தெரிவு செய்து பொருத்தமான இனப்பெருக்கக் கொள்கைக்கு ஏற்ற மாடுகளை செயற்கை /இயற்கை முறையில் சினைப்படுத்தி வர ஒரு கட்டத்தில் உங்கள் ஊருக்கு பொருத்தமான அதிக உற்பத்தியுடைய கன்றுகள் வரும். அப்படித்தான் யாழ்ப்பானத்தில் பத்துப் பதினைந்து லீட்டர் உற்பத்தி தரும் மாடுகள் தோன்றியுள்ளன. அந்தந்த ஊருக்கு பொருத்தமாக அவை உருவாகியுள்ளன. நீண்ட கால சினைப்படுத்தலின் விளைவு. அவற்றை குறைந்தபட்சம் கிளிநொச்சிக்கு மாற்றினாலே அவற்றின் உற்பத்தி பாதிக்கும். எனவே உங்கள் ஊரில் உள்ள மாடுகளை சிறிது சிறிதாக தரம் உயர்த்துதல்தான் சரியான வழி. என்ன சிறிது காலம் எடுக்கும். அவசரப்படுபவருக்கு கால்நடை வளர்ப்பு பொருத்தமற்றது. வேறு தொழில் பார்க்கலாம். இது உயிர் சம்பந்தப்பட்டது. இயந்திரம் கிடையாது.

உண்மையில் அறியாமை காரணமாகவே இந்த தவறான விடயங்கள் நிகழ்கின்றன. பல புதிய பண்ணையாளர்கள் நினைப்பது போல் மாடு வளர்ப்பு இலகுவான காரியம் கிடையாது. முடிந்தவரை புதிய பண்ணையாளர்கள் பண்ணைகளை தொடங்க முன் உங்கள் உங்கள் பிரிவுகளில் உள்ள கால்நடை வைத்தியரிடம் போய் உங்கள் திட்டத்தைச் சொல்லுங்கள். அவர்கள் அந்த பிரிவுக்கு பொருத்தமான கால்நடைகளை முகாமைத்துவ முறைகளை பரிந்துரைப்பார்கள். இதன் காரணமாக பண்ணைகளில் நட்டமடையும் வீதம் குறையும். பொருத்தமற்ற கால்நடைகளை கொண்டு வரத் தேவையில்லை. வீணாக நட்டமடையத் தேவையில்லை.



வேதநாயகம் தபேந்திரன்



# மஞ்சள் மகிமை

எமது உணவுப் பாரம்பரியத்தில் உணவுகளுக்கு நிறமூட்டி அதனூடாகச் சுவையூட்டி உண்பது ஒரு வகை.

மஞ்சள் மட்டுமே கெடுதல் இல்லாத சுவையூட்டியென இயற்கை விஞ்ஞானம் கூறுகிறது.

விவசாயத்தைப் பெருமளவுக்கு வாழ் வாதாரமாகக் கொண்ட எமது நாட்டில் மஞ்சள் உற்பத்தி தொடர்பாகப் போதிய அக்கறை எடுக்கப்படவில்லை. இந்தியாவி லிருந்து மஞ்சளை இறக்குமதி செய்வது மிக நீண்ட காலமாக இருந்தது.

2019 நவெம்பரில் கோத்தபாய ராஜபக்ச ஆட்சிக் கட்டிலில் ஏறியதும் உள்நாட்டில் தன்னிறைவுப் பொருளாதாரம் தேவை யெனத் திடீரென மஞ்சள் இறக்குமதியை நிறுத்தியது. விளைவு ஒரு கிலோ மஞ்ச ளின் விலை திடீரென 8000 ரூபாவுக்கு எகிறிப் பாய்ந்தது. தமிழகத்திலிருந்து கடத் தல் மூலமாக மஞ்சள் மூடை மூடையாக வந்தது. பிடிபட்டதும் பிடிபடாததுமாக இருந்தது.

மஞ்சளை உற்பத்தி செய்யச் சொல்லி அரசாங்கம் தூண்டியது. மூன்று வருடச் சுழற்சியில் மஞ்சள் உற்பத்தி கூடியதால் தற்போது நன்றாகக் காய்ந்த ஒரு கிலோ மஞ்சளின் விலை 2000 ரூபா முதல் 2500 ரூபா வரையில் அதிகரித்துள்ளது.

சந்தைகளில் பச்சை மஞ்சள் கட்டிகளை கிலோ 100 ரூபா என விற்பனை செய்வதை யும் காணலாம்.

இலாபம் அதிகம் தரும் பயிரென மஞ்ச ளைப் பெருமளவிலானோர் பயிரிட்டு அறு வடை செய்ததன் விளைவே இந்த விலை வீழ்ச்சி எனலாம்.

> *“மண்வளம் தாராளமாக உள்ள எமது நாட்டில் இது போன்ற உற்பத்திகளை மேற்கொண்டு இறக்குமதிகளை நிறுத்தி எம் கையே எமக்கு உதவியென வாழலாமென்பது பேருண்மை.. மஞ்சள் பயிர்க் கன்று ஒன்றை பசளையுள்ள மண்ணில் நட்டு நன்கு நீரூற்றி வளர்த்தால் 08 மாதத்தில மஞ்சள் கன்று மண்ணின் கீழ் கொத்துக் கொத்தாக நிறைய மஞ்சள் கட்டிகளைத் தரும்.”*

மஞ்சள் பயிரிடுகை நட்டமெனப் பெரு மளவானோர் கைவிடும் போது மீண்டும் மஞ்சளின் விலையேற்றமும் கள்ளக் கடத்தலும் அதிகரிக்கப் போகிறது.

எது எப்படியோ சுதேச உற்பத்திகளை உருவாக்க வேண்டுமென்ற அரச கொள் கையின் வெற்றி பெற்றுள்ளது.

மண்வளம் தாராளமாக உள்ள எமது நாட்டில் இது போன்ற உற்பத்திகளை மேற் கொண்டு இறக்குமதிகளை நிறுத்தி எம் கையே எமக்கு உதவியென வாழலா மென்பது பேருண்மை.

மஞ்சள் பயிர்க் கன்று ஒன்றை பசளை யுள்ள மண்ணில் நட்டு நன்கு நீரூற்றி வளர்த்தால் 08 மாதத்தில மஞ்சள் கன்று மண்ணின் கீழ் கொத்துக் கொத்தாக நிறைய மஞ்சள் கட்டிகளைத் தரும்.

பச்சையான நிலையில் நன்கு விளைந்த மஞ்சள் கட்டிகளை எடுத்து மண் போகத் தூய்மையாகக் கழுவ வேண்டும். பின்னர் அவற்றைக் காலை நேரத்தில் 07 மணி முதல் 10 மணி வரையிலான வெய்யிலில் காய வைக்க வேண்டும். பின்னர் மாலை யில் 04 மணி முதல் 06 மணி வரையி லான வெய்யிலில் காய வைக்க வேண்டும்.

கடுமையான வெய்யில் நேரத்தில் உலர வைத்தால் மஞ்சள் கட்டிகள் கடுமை யாகச் சுருங்கிச் சுருண்டு விடும். இது மஞ்சளின் தரத்தைப் பாதித்து விடும்.

அதனால் தான் மிதமான ஒரு வெய்யி லில் பச்சை மஞ்சளைக் காய வைத்தல் வேண்டும். நன்றாகக் காய்ந்து இறுகிய பின்பாக மஞ்சள் கட்டிகளை அரைத்துத் தூளாக்கிச் சமையல் தேவைக்குப் பாவிக் கலாம்.

காயாத பச்சை மஞ்சளை முன்னொரு காலத்தில் அரைத்து எடுத்துப் பெண்கள் முகத்திற்குப் பூசித் தம்மை அழகுபடுத்திக் கொண்டார்கள்.

எமது உடலில் கை கால்களிலோ வேறு இடங்களிலோ அடிபட்டு நோவு ஏற்பட்டால் அதன் நோவைப் போக்க மஞ்சள் உதவு கின்றது.

அலுமினியப் பாத்திரமொன்றில் நல் லெண்ணையைக் காய்ச்சி அதனுள் மஞ் சள் தூளையிடல் வேண்டும்.

எண்ணெய்யும் மஞ்சளும் நன்றாகக் காய்ச்சுப்பட்டதும் அதனை ஒரு சீலையில் வைத்து வெப்பம் ஓரளவு குறைந்து வந்த தும் நோப்பட்ட இடத்தில் ஒத்தடம் போலக் கொடுக்க வேண்டும். பின்னர் அதனை எடுத்து நோ உள்ள இடத்தில் வைத்துச் சீலையால் கட்ட வேண்டும்.

ஓரிரு நாள்களில் நோ மாறி விடும். இது போல மஞ்சளுக்கு ஏராளமான மருத் துவப் பயன்கள் உண்டு.

பக்க விளைவு இல்லாமல் இயற்கையா கக் கிடைக்கும் மஞ்சள் போன்ற பொருள்கள் மூலமாகப் பல நோய்களைத் தீர்த்த பாரம் பரிய முறைகளை மீள் உருவாக்கம் செய்வ தன் மூலமாக ஆரோக்கியத்தை ஏற்படுத்த லாம். வாழ்க்கைச் செலவைக் குறைக்கலாம்.

# CASH FLOW STATEMENT




(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிதிப்பாய்ச்சல் கூற்று: ஒரு நிறுவனத்தின் செயற்பாட்டு மூலதனம் மற்றும் நீண்ட கால நிதிகளில் ஏற்படும் மாற்றங்களில் கவனம் செலுத்துகிறது. நடப்பு சொத்துக்கள், நடப்பு பொறுப்புகள், நிலையான சொத்துக்கள் மற்றும் நீண்ட காலக் கடன் போன்ற பல்வேறு இருப்புநிலை உருப்படிகளுக்கு இடையேயான நிதிகளின் நகர்வு பற்றிய நுண்ணறிவுகளை இது வழங்குகிறது.

**3. பரிவர்த்தனைகளின் தன்மை:**

காசுப்பாய்ச்சல் கூற்று: பண வரவுகள் மற்றும் கொடுப்பனவுகள் உட்பட உண்மையான பண பரிவர்த்தனைகளை அறியத்தருகின்றது. இது ரொக்கம் மற்றும் பணச் சமமானவை இரண்டையும் கருதுகிறது, அவை உடனடியாகப் பணமாக மாற்றக்கூடிய அதிக திரவ சொத்துக்களாகும்.

நிதிப்பாய்ச்சல் கூற்று: பணமில்லாப் பரிவர்த்தனைகள், அதாவது செயற்பாட்டு மூலதனத்தில் மாற்றங்கள் மற்றும் நீண்ட கால நிதிகள். தேய்மானம், வியாபார இருப்புகளில் மாற்றங்கள் மற்றும் நீண்ட காலக் கடன் வாங்குதல் போன்ற உண்மையான பணத்தை உள்ளடக்காத பரிவர்த்தனைகளை இது கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

**4. நோக்கம்:**

காசுப்பாய்ச்சல் கூற்று: ஒரு நிறுவனத்தின் குறுகிய கால பணப்புழக்கம் மற்றும் பணத்தை உருவாக்கும் திறனை மதிப்பிட உதவுகிறது. ஒரு நிறுவனத்தின் குறுகிய கால கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அதன் செயற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்கும் அதன் திறனை மதிப்பிடுவதற்கு இது முக்கியமானது.

நிதிப்பாய்ச்சல் கூற்று: ஒரு நிறுவனத்தின் நிதி ஆரோக்கியம் மற்றும் நீண்ட காலக் கடனளிப்பு பற்றிய பரந்த பார்வையை வழங்குகிறது. பணி மூலதனத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் நீண்ட கால நிதி முடிவுகள் உட்பட ஒரு நிறுவனத்திற்குள் நிதியின் இயக்கத்தைப் புரிந்துகொள்ள இது உதவுகிறது.

கட்டுரையாளர் – **+94-777-802-900**
மின்னஞ்சல் –
**swaminathan@agsarma.com**






# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

இப்ப பாத்தம் எண்டால் எங்கடை ஆக்கள் விடியக்காலமை எழும்பி பல்லுத்தீட்டிறதுக்கு அந்தப் பேஸ்ற் இந்தப் பேஸ்ற் அந்த பிறஷ் இந்த பிறஷ் எண்டு காசைக் கரியாக்கினம். உதுக்குள்ளை இன்னுமொரு முசுப்பாத்தி இருக்குது என்னண்டால் சில துகள் விடிய எழும்பாதுகள். அப்பிடி பிந்தி முந்தி எழும்பினாலும் பல்லுத் தீட்டாதுகள். பல்லுத் தீட்டாமலே கோப்பி தேத்தண்ணி குடிக்குங்கள். சிலதுகள் அதை இதை எண்டு திண்டும் போடுங்கள். கேட்டால் நாகரிகம் எண்டுங்கள். எங்கடை ஆச்சி விடிஞ்சாப்பிறகும் நித்திரை கொள்ள விட மாட்டா. டேய் பிள்ளையார் கோயில் மணி அடிச்சு எவ்வளவு நேரமாப் போச்சுது? கவட்டுக்கை கையை வைச்சுக்கொண்டு இன்னும் என்ன நித்திரை. ஆட்டடி மாட்டடி கூட்டி வயலுக்கை கொண்டு போய் கொட்டிறேல்லையோ தண்ணி அள்ளப் போறேல்லையோ. இப்ப எழும்பேல்லை எண்டால் தண்ணி கொண்ணந்து ஊத்துவன் வடுவா எண்டு சுப்பிரபாதம் பாட வெளிக்கிட்டு



விடுவா. ஆச்சியின்ரை சத்தம் கேட்டதுமே நாங்கள் பாய் சுருட்டின பாதி சுருட்டாத பாதி எண்டு பதறிச் துடிச்சு எழும்புவம்.

நித்திரையால எழும்பின பிறகு பல்லுத் தீட்டி முகம் கழுவாமல் அடுக்களையுக்கை அடுக்கவும் மாட்டா. என்னதான் வடிவான ஆக்கள் எண்டாலும் இரவிலை படுக்கேக்கை வாயை ஆவெண்டபடிதான் படுப்பினம். அப்படிப் படுகேக்கை கிருமியள் வந்து பல்லுவழியை குடியேறி குடும்பம் நடத்தி பிள்ளை குட்டி பேரப் பிள்ளையள் சிலநேரம் பூட்டப் பிள்ளையள் எண்டு பெருககுங்கள் எண்டுவா ஆச்சி. உந்தக் கிருமியள் பெருகிற விசயத்தைச் சொல்லாமல் இரவிலை வாயை வந்து பேய் அளைஞ்சு இருக்கும் எண்டபடியால பல்லுத் தீட்டித்தான் தின்ன வேணும் குடிக்க வேணும் எண்டு முந்தி எங்கடை ஆச்சி அப்புகள் வெருட்டுறதுகள். நித்திரையாலை எழும்பி பல்லுத் தீட்டாமல் திரிஞ்சால் ஆச்சி போயிலைக் காம்பாலை குண்டியிலை ரெண்டு போட்டுக் கிணத்தடிக்குத் துரத்தி விடுவா.

முந்திச் சின்ன வயசில பற்பொடி இல்லாட்டில் வீபூதி சுடப்பாவிக்கிற உமிச்சாம்பல் அடுப்புக்கரி எண்டு பல்லுத் தீட்டப்பாவிக்கினனாங்கள். பெரிய செலவு ஒண்டும் இல்லை. அப்பேக்கை பற்பொடி பக்கற்று அஞ்சு ரதம் தான். அடுப்பில இருக்கிற கட்டைக் கரித்துண்டை எடுத்து வாய்க்குள்ளை போட்டு கறக்பறக் எண்டு கடிச்சு பேந்து நாக்கு நுனியால முன்னுக்கு இழுத்துக் கொண்ணந்து விரலால தீட்டுவம். உதுக்கு பூவரசம் கட்டை விறகுதான் நல்லம் கருக்கு மட்டை சிலவேளை கயரும். எங்கயும் நொங்கைக் கடிச்சு இளனிக்கோம்பையைக் கடிச்சு பல்லிலை காவி வந்தால் ஆச்சி சனியனே கிறகமே பல்லு என்ன நிறத்தில இருக்கு பார் உந்த வாத்திமார் உதுகள் ஒண்டும் பாக்கிறேல்லையோ எண்டு போட்டு அடுப்பிலை பாக்கைப் போட்டு சுட்டுத்தருவா. பாக்குக் கரியாலை தீட்டினாப் பல்லு நல்ல பளிச்செண்டு வரும். பயப்பிடாமல் ஆருக்கும் பல்லைக் காட்டலாம் எண்டுவா.

உதுகளைவிட இன்னொருதிறஞ்சமான என்னண்டால் புழுதி மண். வீட்டில கிணத்தடியில கொட்டி கும்பியா இருக்கிற ஐயனார் கோயில் புழுதியாலயும் பல்லுத் தீட்டுவம். என்னட்டை இப்பவும் இருக்கிற ஒரு பழக்கம் என்னண்டால் பற்பொடியாலதான் பல்லுத் தீட்டிறனான். இந்தப் பறபொடியால தீட்டினா பல்லு ஈறு நாக்கு எல்லாம் றோஸ் கலறில வந்திடும். முந்திச் சின்ன வயசில பாவிச்ச அதே கோபால் பற்பொடி இல்லாட்டில் அண்ணா பற்பொடி தான் இப்பவும் பாவிக்கிறனான். அது இல்லை எண்டால் உமிச்சாம்பல் பாவிப்பன்.

உதைவிட வேலியில நிக்கிற வெக்கிழுவை, முக்கிழுவை பூவரசு, வேப்பங்குச்சியள் பிள்ளையார் கோயிலடியில நிக்கிற ஆலமர விழுதுக் குச்சியளாலையும் முந்தி நாங்கள் பல்லுத்தீட்டுவம். ஒர் அளவான குச்சியைப் பிடுங்கி அதுகின்ரை நுனியைப் பல்லால சப்பி பிறக்ஷ்மாதிரி ஆக்கிப்போட்டு பல்லுத் தீட்டுவம். வெள்ளைக்காரன் பல்லுத் தீட்டிற பிறஷ்ஷைக் கண்டு பிடிக்க முதலே நாங்கள் உதைப் பாவிக்கத் தொடங்கிப் போட்டம் எண்டு எங்கட அப்பு பெரிய அவுறுகமாச் சொல்லுவார். அப்பு உப்பிடிச் சொன்னதுக்கு என்ன ஆதாரம் எண்டு ஆரும் குறுக்க மறுக்க வண்டிலை விடப் படாது.

உப்பிடித் தமிழன் பிறஷ் பாவிச்ச விசயத்தை எங்கட ஔவையார் ஆயிரம் வருசங்களுக்கு முதலே ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி எண்டு வள்ளீசாச் சொல்லிப் போட்டா. விடியக்காத்தால உப்பிடி உந்தக் குச்சியளால பல்லைத் தீட்டிக்கொண்டு ஒழுங்கையால வாற ரெண்டொரு பேரோட துப்பித்துப்பி அரசியல் மற்றது ஆற்றையும் கதை எண்டு கதைச்சுக்கொண்டு காலாற நடந்து காத்தாட வெளிக்குப் போறதில இருக்கிற சந்தோசம் இருக்கே அது சினமன் கிராண்டில கண்ணாடியைப் பாத்துக் கொண்டு இருக்கிறதில கடைசிவரையும் கிடையாது கண்டியளே ...

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2023இல் வெளியிடப்பெற்றது.